ஏப்ரல் 9உ முதல்
ராஜதானி பூராவும்
40 தியேட்டர்களில்
நடைபெறுகிறது....

ஜெமினி
சந்திரலேகா

டி. ஆர். ராஜகுமாரி.. எம். கே. ராதா.
ரஞ்சன்..... சுந்தரி பாய்.........
என். எஸ். கிருஷ்ணன்.. டி. ஏ. மதுரம்
எல். நாராயண ராவ்.. மற்றும் பல
...ற்றுக்கணக்கான நடிகர்கள் நடித்தது

சென்னையில் வெலிங்டன்.. ஸ்டார்.. கிரௌன் ஆகிய மூன்று தியேட்டர்களிலும்

இப்பொழுது தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில்

வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

டி.கே.எஸ். பிரதர்ஸ் & சேலம் ஷண்முகா பிலிம்ஸ் தயாரிப்பு

T.K. ஷண்முகம் T.K. பகவதி M.S. திரௌபதி மற்றும் M.S.I.S. சபா நடிகர்கள் நடித்த

பில்ஹணன்

காதல் சித்திரம்

டைரக்ஷன்: K.V. சீனிவாசன் ஸ்டுடியோ: சென்ட்ரல். கோவை.

திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்கள் :—சங்கர் பிக்சர்ஸ், ஸ்ரீரங்கம்.
மலபார், இலங்கை, பர்மா :—டி. கே. எஸ். & பிரதர்ஸ், கோயமுத்தூர்.
சேலம், மைசூர், எ[illegible]. எம். எஸ்., பங்களூர் :—சேலம் ஷண்முகா பிலிம்ஸ், குகை, சேலம்.
மதராஸ், செங்கற்[illegible]ட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயமுத்தூர், நீலகிரி, ஆந்திரா,
வட இந்தி[illegible]ா :—ஜெயா பிலிம்ஸ், செவ்வாய்பேட்டை சேலம்.
மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம் :—ராமநாதன் பிக்சர்ஸ், காரைக்குடி.

குண்டூசி

தமிழ் நாட்டின்
அதிக விநியோகமுள்ள
கலைப் பத்திரிகை

பிரதி மாதம் வெளிவரும்

சந்தா விவரம்

உள் நாடு

வருஷ சந்தா	... ரூ.	6
ஆறு மாத சந்தா	ரூ.	3
தனிப் பிரதி	அணா	8

இலங்கை

வருஷ சந்தா	... ரூ.	6
தனிப் பிரதி	சதம்	50

வெளி நாடு

வருஷ சந்தா	... ரூ.	9
தனிப் பிரதி	அணா	12

விளம்பர விகிதங்கள்

(ஒரு தடவைக்கு)

அட்டை

முன் பக்கம்	... ரூ.	450
கடைசிப் பக்கம்	ரூ.	250
2 & 3-ம் பக்கம்	ரூ.	150

சாதாரணப் பக்கம்

ஒரு பக்கம்	... ரூ.	75
அரைப் பக்கம்	... ரூ.	40
1/3 பக்கம்	... ரூ.	30
கால் பக்கம்	... ரூ.	25

வர்ண விளம்பரங்களுக்கு
25% அதிகம்

இந்த ஊசியில்

சர்வதாரி பிறந்தது	தலையங்கம்	5
பரஸ்பரம்		6
உள்ளது உள்ளபடி	"ஜடாயு"	7
சந்திரலேகா	படவிமர்சனம்	9
தலை வேதனை	கேலிச் சித்திரம்	11
யு. ஆர். ஜீவரத்தினம்	மூவர்ணப் படம்	13
டி. ஆர் மஹாலிங்கம்	ஆர்ட் படம்	14
டி. ஆர். மஹாலிங்கம்	வாழ்க்கை வர்ணனை	15
குண்டூசியைக் கேளுங்கள்		23
செய்திப் படங்கள்		31
பொதுஜனம் பேசுகிறார்		39
நுனிப்புல்	"வெட்டுக்கிளி"	42
புஸ்தகப் பொழுது	விமர்சனம்	45
காஷ்மீர் கைகுட்டை	வி. எஸ். வெங்கடேடன்	47
விபரீத முடிவு	தமாஷ் சித்திரம்	54
டி. சூர்யகுமாரி	ஆர்ட் படம்	55
ஆர். ரஞ்சன்	ஆர்ட் படம்	56
இது செய்தி		57
மில்ஹணன்	படவிமர்சனம்	62
பிரம்மலோகம்	படச் செய்திகள்	65
குண்டூசி டைரி		68

கட்டுரையாளர்களுக்கு :

"குண்டூசி"க்கு கேள்விகள், நேயர்களின் அபிப்பிராயங்கள், வெளியூர் சினிமா நிகழ்ச்சிகள், சினிமா சம்சந்தமான விகடத் துணுக்குகள், சித்திரங்கள், கட்டுரைகள், கதைகள் இவை யெல்லாம் வரவேற்கப் படுகின்றன. எழுதி அனுப்புப வைகளைக் காகிதத்தின் ஒரே பக்கத்தில், மையினால் சுத்தமாக எழுதி அனுப்ப வேண்டும். அங்கீகரிக்கப்படாதவைகளை திரும்பப் பெற விரும்புபவர்கள் ஸ்டாம்பு வைத்தனுப்ப வேண்டும். கட்டுரையாளர்களுடன் கடிதப்போக்கு வரத்து வைத்துக் கொள்ளுவது சாத்திய மில்லை.

"குண்டூசி," 246, தம்பு செட்டி தெரு, சென்னை 1.

போட்டி வெற்றி சுலபம்

ரூ. 25000★

5 பரிசுகள், ரூ. 10000, 6000, 4000, 3000, 2000

134109.

போட்டி

M. 62

★ இந்தக் கட்டத்தில் 8 முதல் 23 வரையிலுள்ள எண்களை இடமிருந்து வலமும், மேலிருந்து கீழும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 62 வரும்படி அமைக்கவும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கலாம்.

கடைசி தேதி :

முந்திய விடை

K. 54

20	6	15	13
9	19	10	16
11	17	8	18
14	12	21	7

உங்கள் விடைகளை 15-5-48க்குள் தபாலில் போடவேண்டியது

25-5-48 ல் சரியான விடை வெளியிடப்படும்.

I, II பரிசுதாரர்களுக்கு தந்தியடிக்கப்படும், எல்லோருக்கும் பரிசு ஜாபிதா அனுப்பப்படும்.

மதராஸ் ரிலயன்ஸ் பாங்கில் சீல் செய்து டிபாஸிட்டில் வைத்துள்ள விடைக்கு எண்ணுக்கு எண் கட்டத்திற்கு கட்டம் சரியான விடைக்கு முதற் பரிசும், முதல் இரண்டு வரிசை சரியான வி[illegible]ம் பரிசும், முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு 3-ம் பரிசும், முதல் இரண்டு எண் சரியான விடைக்கு 4-ம் பரிசும், முதல் எண் மாத்திரம் சரியான விடைக்கு 5-ம் பரிசும், அளிக்கப்படும்.

பிரவேசக் கட்டணம் : **1 விடைக்கு ரூ. 1-0-0, 6 க்கு ரூ. 5-0-0 மாத்திரம்.**

எத்தனை விடைகள் வேண்டுமானாலும் சாதாரண காகிதத்தில் தயாரித்து டி கட்டணத்துடன் அனுப்பவும். பரிசு ஜாபிதாவுக்காக உங்கள் அட்ரஸ் எழுதிய கவர் ஒன்று வைக்கவும். டி கட்டணத்தொகையை மணியார்டர் மூலமாக அனுப்பவும். உங்கள் அட்ரஸை M. O. கூபனிலும், கவரிலும் தவறாமல் குறிக்கவும்.

★ நிகர வசூல் ரூ. 25000 க்குக் குறைந்தால் பரிசுகளின் தொகையும் அதற்கேற்றாற்போல் குறைத்து பகிர்ந்து அளிக்கப்படும். எல்லா விஷயங்களுக்கும் எங்கள் தீர்ப்பே முடிவானது போட்டியில் கலந்து கொள்பவர்கள் மேற்படி விதிகளை ஏற்றுக்கொண்டதாகவே பாவிக்கப்படும். மற்ற விதிகள் வழக்கம்போல்.

பிரதி மாதம் இரண்டு போட்டிகள் நடைபெறும். விவரங்கள் இனும்.

லக் & கோ., Firm 1564. (Govt. Rgd.) 43/23, ஈஸ்வரன் தெரு, **மதராஸ் 17.**

பட்டை 1
ஊசி 7

குண்டூசி

ஏப்ரல்
1948

ஆசிரியர்
பி.ஆர்.எஸ்.கோபால்

சர்வதாரி பிறந்தது

சர்வஜித்து வருஷம் முடிந்து சர்வதாரி வருஷம் பிறந்து விட்டது. குழப்ப முற்றிருந்த சினிமா வானில் சூழ்ந்திருந்த கருமேகங்கள் மெதுவாகக் கலைந்து, ஒளி பரவ ஆரம்பித்திருப்பது நல்ல சூசனைதான். பட உலகில் மீண்டும் மெதுவாக சுறுசுறுப்பு ஏற்பட்டு வருவது உத்ஸாகத்தை அளிக்கிறது.

சினிமா உலகைப் போலவேதான் பத்திரிகை உலகமும் குழப்பமான நிலைமையில் இருக்கிறது. தினம் சில பத்திரிகைகள் பிறப்பதும், தினம் பல பத்திரிகைகள் இறப்பதுமாக உள்ள இந்த சமயத்தில் "குண்டூசி" பாலாரிஷ்ட நோய் கண்டு இறந்து விடாமல், ஆறே மாதங்களுக்குள் அதிக விநியோகமுள்ள முதல்தர சினிமாப் பத்திரிகையாக விளங்குவதற்கு, ஆயிரக் கணக்கான நேயர்களின் மனப்பூர்வமான ஆதரவுதான் காரணமாகும். இவர்களுக்கு சர்வதாரி வருஷம் சுபீக்ஷத்தையும், சுக வாழ்வையும் அளிக்கவேண்டுமென கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

நம் பத்திரிகையின் ஏஜண்டுகளும், வாசகர்களில் அநேகரும், படத்தொழில் பிரமுகர்கள் பலரும் நமக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை அனுப்பியிருக்கின்றனர். ஆனால் பெல்காமில் ஹவில்தார் கிளார்க்காக உள்ள ஸ்ரீ. டி. எஸ். தியாகராஜன் என்ற அன்பர் தம் புதுவருஷ வாழ்த்துக்களை புது மாதிரியான வகையில் நமக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். தம் புது வருஷ வாழ்த்துக்களுடன் அவர் ஒரு பொட்டலம் புதிய குண்டூசிகளை நமக்கு அனுப்பியிருக்கிறார்! இதே போல் அநேக நண்பர்கள், "குண்டூசி" ஆறே மாதத்தில் செய்துள்ள சேவைகளைப்பாராட்டியும், அது அபாரமான வேகத்தில் வளர்ச்சிபெற்று வருவதற்காக சந்தோஷித்தும் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

இவர்கள் அனைவருக்கும் தனித்தனியாக பதில் எழுத முடியாமலிருப்பதால் இதன் மூலம் நம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நம் புத்தாண்டு வாழ்த்துக்களைக் கூறுகிறோம்.

"குண்டூசி" சினிமா அன்பர்களின் பத்திரிகை. அவர்கள் இப்புது வருஷத்தில் எவ்வளவு அதிகமான ஆதரவு அளிக்கிறார்களோ அவ்வளவு அதிக முன்னேற்றத்துடன் "குண்டூசி" வளர்ச்சி பெற்று, பொது மக்களுக்கும், சினிமாக் கலைக்கும் தன்னாலியன்ற தொண்டைச் செய்துவரும் என்று உறுதி கூறுகிறோம்.

பரஸ்பரம்

நமது வாசகர்கள் எனக்கு அடிக்கடி கடிதம் எழுதி எனக்கு உத்ஸாக மூட்டி வருகிறார்கள். எனக்குத்தான் அவர்களுக்குப் பதில் எழுத அவகாசம் கிடைப்பதில்லை. என் மனதில் என்னவோ நேயர்களுடன் பரஸ்பரம் அளவளாவ வேண்டுமென்ற ஆசை அதிகமுண்டு. அதன் காரணமாகத்தான் இப் பகுதியை ஆரம்பிக்கிறேன்.

*　　*　　*

இந்த ஏழாவது ஊசிமுதல் பக்கம்முதல் கடைசி வரையில் ஒவ்வொரு பக்கமும் புது மணத்துடன் விளங்குவதைக் காணலாம். இதைச் சொன்னதும், நம் சித்திரக்காரர் "முகில்" அவர்களுக்குப் பொறுக்க வில்லை. "இதென்ன ஸார், பிரமாதம்! இனி வரப்போகிற ஊசிகளைப் பாருங்கள், ஒவ்வொன்றிலும் வர்ண ஜாலத்தை உண்டு பண்ணப் போகிறேன்" என்று கூறுகிறார். அவர் உடம்பில் தெம்பும், கையில் வித்தையும், மனதில் உத்சாகமும் உடைய வாலிபர். அதோடு கூட சொன்னபடி செய்தே தீரும் பிடிவாத குணமும் அவருக்குண்டு என்பதையும் கூறி உங்களை எச்சரித்து விட விரும்புகிறேன்.

*　　*　　*

நண்பர் "வெட்டுக்கிளி" இருக்கிறாரே அவருக்கு சினிமாத் தொழிலைப் பற்றிய உள் விஷயங்கள் எல்லாம் நன்றாய்த் தெரியும். அவர் நேயர்களுக்காக மிகுந்த சிரமப்பட்டு பலமூலைகளிலிருந்தும் விஷயங்களைச் சேகரித்து நையாண்டி செய்து வருகிறார். அவருடைய "நுனிப் புல்" பகுதியை மெச்சி நமக்கு நூற்றுக் கணக்கான கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதெல்லாம் சரிதான்; ஆனால் அவரிடம் எனக்கு ஒரு விஷயம்தான் பிடிக்க வில்லை. நுனிப்புல்லை மேய்ந்து கொண்டிருக்க வேண்டிய அவர் திடீர் திடீரென்று என் தலை மீது மேய ஆரம்பித்து விடுகிறார். சினிமா உலகம் வரண்டு போயிருப்பதால் பசும் புல் கிடைக்க வில்லையென்று சதா முறையிடுதான்! இந்த நிலைமை நீடித்தால் புல்தரை போல் உள்ள என் தலை சீக்கிரமே "பாலைவன"மாக ஆகி விடுமோ என்ற பயம் எனக்கு!] ஆதலால், சினிமா உலகில் கலகலப்பு ஏற்பட்டு, நம் "வெட்டுக்கிளி"யாருக்கு நிறைய பசும்புல் கிடைக்க வேண்டுமென பிரார்த்தித்து வருகிறேன்.

*　　*　　*

ஸ்ரீ. வி. எஸ். வெங்கடேசனைப் பற்றி உங்களுக்கு முன்பே தெரியும். அவருடைய "முதலாளி நடிகன்" என்ற ரஸமான கதையை முந்தின ஊசி ஒன்றில் படித்திருக்கிறீர்கள். ஸ்ரீ. வி. எஸ். வி. ஒரு சிறந்த கதாசிரியர். ஹிந்தியிலிருந்து சில கதைகளை மொழி பெயர்த்திருக்கிறார். சொந்தத்திலும் பல கதைகளை எழுதி யிருக்கிறார். அவருடைய "காஷ்மீர் கைக்குட்டை" என்ற ரஸமான சிறு கதை இந்த ஊசியில் வெளி வருகிறது. அதை நீங்கள் மிக விரும்புவீர்கள் என்று நம்புகிறேன்.

*　　*　　*

"குண்டூசி"யைப்பல நேயர்கள் புகழ்ந்து எழுதியிருப்பது போலவே சில நண்பர்கள் குறைகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். பொதுவாக எல்லோரும் கூடப் பக்கத்தை நாம் உபயோகிக்கும் காகிதம் பற்றித்தான். "குண்டூசி" பூராவையுமே ஆர்ட் பேப்பரில் அச்சடித்து வெளியிட வேண்டுமென்பதே என் நோக்கம். ஆனால் தற்போது அப்படிச் செய்யாமலிருப்பது பணச் சிக்கனம் காரணமாக அல்ல என்பது அநேக நேயர்களுக்குத் தெரியவில்லை. "புதிதாக ஆரம்பிக்கப்படும் பத்திரிகைகள் 'நியூஸ் பிரிண்ட்' காகிதத்தில் தான் அச்சிடப்பட வேண்டும். நான்கு பக்கங்கள் தான் ஆர்ட் படங்கள் வெளியிடலாம்" என்று சர்க்கார் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். இதன் காரணமாகவே தான் வேறு நல்ல காகிதத்தில் அச்சிடுவதோ அல்லது அதிக ஆர்ட் படங்களை வெளியிடுவதோ சாத்தியமில்லாமலிருக்கிறது. ஆதலால், நாம் நியூஸ் பிரிண்டிலேயே விலை உயர்ந்த ரகத்தை வாங்கி உபயோகித்து வருவதை நேயர்கள் கவனித்திருப்பர். இந்த கட்டுப்பாடும், குறையும் கூடிய சீக்கிரத்தில் நீங்கி விடும் என்று நம்புகிறேன்.

—ஆசிரியர்.

உள்ளது உள்ளபடி

இந்தியாவில் சுதந்திர சர்க்கார் ஏற்பட்டதும், சினிமாத் தொழிலில் அவர்கள் மிகுந்த அக்கறை செலுத்த ஆரம்பித்திருப்பதும் மிகவும் சந்தோஷிக்கத் தக்க விஷயமாகும். செய்திப் பட இலாக்காவை அவர்கள் புதிப்பிக்க முற்பட்டிருப்பதைப் பற்றி முன்பே பாராட்டி எழுதியிருக்கிறேன். தணிக்கை முறையிலும் அவர்கள் புதுக் கொள்கையை அனுஷ்டிக்கும்படிச் செய்திருக்கின்றனர். இதன் விளைவாக பல ஆங்கிலப் படங்களில் இந்தியாவைப் பற்றிய அவதூறான விஷயங்கள் வெட்டப் பட்டிருக்கின்றன. சில படங்களுக்கோ கல்தாவே கொடுக்கப் பட்டு மிருக்கிறது.

கொள்கை முரண்பாடு

இந்தியாவில் பட தணிக்கை முறைகள் முரண்பாடான முறையிலேயே இருந்து வருகின்றன. பம்பாயிலுள்ள தணிக்கை போர்டார் ஒரு படத்தைக் காட்ட அனுமதிப்பார்கள். ஆனால் அந்தப் படத்தை சில சமயங்களில் கல்கத்தாவிலுள்ள தணிக்கை போர்டாரும் சென்னையிலுள்ள தணிக்கை போர்டாரும், ஒன்று காட்டக்கூடாது என்பார்கள்; அல்லது சில காக்ஷிகளை நீக்கிவிட்டுக் காட்டும்படி உத்தரவிடுவார்கள்.

இதே போலவே, ஒரு மாஹாண போர்டார் அங்கீகரிக்காமலோ, அல்லது பாதியளவு மட்டும் அங்கீகரிக்கவோ செய்த சம்பவங்கள் பல உண்டு. எனவே, "பம்பாயிலுள்ள இந்தியர்களுக்கு ஒரு படம் லாயக்கற்ற தென்றால் அப்படம் கல்கத்தாவிலுள்ள, அல்லது சென்னையிலுள்ள இந்தியர்களுக்கு மட்டும் எங்ஙனம் ஏற்றதாய் இருக்க முடியும்? அதே போல் ஒரு படம் பம்பாய் ரஸிகர்கள் பார்க்கக்கூடிய தென்றால் அதை மற்ற மாஹாண ரஸிகர்களும் ஏன் பார்க்கக் கூடாது? சௌகரியத்தை அனுசரித்து இரண்டு மூன்று தணிக்கை போர்டுகள் இருக்கலாமே யொழிய கொள்கை விஷயத்தில் வித்தியாசம் இருக்கவே கூடாது" என்று பலவருஷங்களாகப் பத்திரிகைகள் எழுதி வந்துள்ளன. ஆனால், அதை இங்கு ஆட்சி செலுத்தி வந்த பிரிட்டிஷ் சர்க்கார் காதில் போட்டுக் கொள்ளாமலே இருந்தனர்.

தணிக்கை முறையில் மாறுதல்

ஆனால் நம் தற்போதைய இந்திய சர்க்கார் இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்து வருகிறார்களாம். இந்தியா பூராவுக்கும் பொதுவான ஒரு மத்திய தணிக்கை போர்டை அமைக்கும் விஷயமாக இந்திய சர்க்கார் ஆலோசித்து வருவதாக பண்டித ஜவஹர்லால் நேரு தெரிவித்தார். அவசியமான இந்த மாறுதலைச் செய்ய முற்பட்டிருப்பதற்காக இந்திய சர்க்காரைப் பாராட்டுகிறோம்.

பிலிம் உற்பத்தி

காந்திஜியின் உயரிய தத்துவங்களில் ஒன்று, ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு தேசமும், தனக்கு வேண்டிய பொருள்களைத் தானே தயாரித்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். சினிமாத் தொழிலும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்திய சினிமாத் தொழிலில் பயன்படும் இயந்திரங்கள், கருவிகள், இவைகளுக்கான ரிபேர் சாமான்கள், வெத்து பிலிம்கள் முதலிய சகலமும் வெளி நாடுகளிலிருந்தே

இறக்குமதியாகி வருகின்றன. இவைகளுக்காகக் கோடிக் கணக்கான நம் பணம் வெளிதேசங்களுக்குப் போய்க் கொண்டிருக்கின்றன. இதைத் தடுப்பதற்காக, சினிமா போன்ற மிக உபயோககரமான தொழில்களுக்கு முடிவு கட்டி விடுவது அர்த்தமற்ற செய்கையாகும். ஆதலால், சினிமாத் தொழிலுக்கு ஹானி ஏற்படாமலும் அதே சமயத்தில் இந்தியப் பணம் கோடிக் கணக்கில் வெளி தேசங்களுக்கு வெளியேறாமலும் இருக்க வேண்டுமானால், இத்தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்களையும், வெத்து பில்ம்களையும் நாமே உற்பத்தி செய்து கொள்ளுவதுதான் சிறந்த மார்க்கமாகும். இந்தியாவிலேயே வெத்து பில்ம் உற்பத்தி செய்யும் விஷயம் யூனியன் பார்லிமென்டில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே வெத்து பில்ம்கள் உற்பத்தி செய்யப்படுமாயின், குறைந்த செலவில், உயர்ந்த முறையில், அதிகப் படங்களைத் தயாரிப்பதற்கு சௌகரியமாயிருக்கும் என்பது நிச்சயம்.

விபரீத உத்திரவு

சென்னை கார்பொரேஷன் கமிஷனர் ஒரு விபரீத உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். சென்னை நகரில் ஜன நடமாட்டம் மிகுதியாயிருக்கும் மூலைகளில்விளம்பர 'பானர்'களை வைக்கக் கூடாது என்பதுதான் அவ்வுத்திரவாகும்.

ஒரு சினிமாப் படத்தை விளம்பரப் படுத்துவதற்கு பெரிதும் உபயோகப் படுபவைகள் பெரிய பானர்களும், (சித்திரப் படுதாக்களும்), சிறிய போஸ்டர்களுமேயாகும். இவைகளை அதிக ஜன நடமாட்டமுள்ள இடங்களில் வைத்தால்தான் அதிக பேர்கள் பார்க்கவும், அதன் மூலம் பயன் ஏற்படவும் கூடும். விளம்பரத்தின் அடிப்படைத் தத்துவமே அதுதான். ஆனால் சென்னை கார்பொரேஷன் கமிஷனருக்குமட்டும் இந்த அடிப்படைத் தத்துவம் தெரியாமல் மேற்படி உத்திரவைப் பிறப்பித்திருக்கிறார். ஜன நடமாட்டமில்லாத இடங்களில் பானர்களை நிர்மாணிப்பதில் கொஞ்சம்கூட அர்த்தமேயில்லை; பயனும் ஏற்படாது. பட விளம்பரங்களுக்கு பானர்களையும், போஸ்டர்களையும் அதிகமாய் நம்பியிருக்கும் படத்தொழிலை இவ்வுத்திரவு மிகவும் பாதிக்கும். ஆதலால் அர்த்தமற்ற இந்த உத்திரவை கார்பொரேஷன் கமிஷனர் உடனே ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

Truthful READY MADE CLOTHES

அழகை அழகு பெறச் செய்வது
அழகான

"ட்ரூத்புல் ஆடைகளே"

தயாரிப்பவர்கள் :
ட்ரூத்புல் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,
மதுரை.

சந்திரலேகா — ஒரு மஹோன்னதப் படம்

ஸ்ரீ. வாஸனின் நிகரற்ற முதல் வெற்றி

தமிழ்ப்பட சரித்திரத்தில் 1948 ஏப்ரல் 9ந் தேதியன்று ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகிறது. இந்திய பட உலகிலேயே மேற்படி ஒன்பதாம் தேதி ஒரு குறிப்பிட வேண்டிய தினமாகிறது. தமிழிலும், மேல்நாட்டு படங்களைப்போல, பிரமாதமான காட்சிகளை அமைத்து, "எல்லா அம்சங்களும் இல்லை" என்பதிற்கிடமில்லாமல் செய்யமுடியும்? என்பதை ஜெமினி ஸ்டுடியோ ஸ்ரீ. வாஸன் அவர்கள் தமது சொந்தப் பார்வையில் தயாரித்த **சந்திரலேகா**வின் மூலம் நிரூபித்துவிட்டார். தமிழ் மக்கள் மார்தட்டி பெருமைப் படக்கூடிய வகையில் அவர் சந்திரலேகாவை சிருஷ்டி செய்திருக்கிறார். ஏப்ரல் ஒன்பதாம் தேதியன்று தமிழ்நாட்டிலும் ஆந்திரதேசத்திலுமாக சுமார் நாற்பது தியேட்டர்களில் ஏககாலத்தில் திரையிடப்பட்ட மேற்படி **சந்திரலேகா** படத்தை தமிழ்ப் படங்களுள் மட்டுமல்ல; ஹிந்தி படங்களுள் கூட தலை சிறந்த படம் என்று சொல்லவேண்டும்.

எஸ். எஸ். வாஸன்

சந்திரலேகா கதை ஒரு சாதாரணக் கதைதான். அதாவது, ஒரு ஊரில் ஒரு ராஜா. அவனுக்கு வீரசிம்மன், சசாங்கன் என்று இரண்டு பிள்ளைகள். இரண்டாவது பிள்ளை தனக்கு ராஜ்யத்தை பட்டம் கட்டும்படி கேட்கிறான். மூத்தவன் இருக்கையில் அப்படிச் செய்யமுடியாதென ராஜா மறுத்துவிடவே, அரண்மனையை விட்டு வெளியேறி, ஒரு பெரிய கொள்ளைக்கூட்டத்தை சேர்த்துக்கொண்டு, தகப்பனை கைதுசெய்து, அண்ணனை குகையில் தள்ளி பெரும் பாறையால் மூடிவிட்டு, கொடுங்கோல் ஆட்சி புரிந்துவருகிறான் சசாங்கன்.

இளவரசனான வீரசிம்மன் ஒரு நாள் அகஸ்மாத்தாக ஒரு சிற்பியின் மகளான சந்திராவை சந்திக்கிறான். இருவரும் காதலிக்கின்றனர். ஆனால் சிற்பியின் மகளுக்கு தான் காதலிப்பது இளவரசன் என்று தெரியாது. இளவரசன் வேறு பெயரை சொல்லிவைத்திருக்கிறான். சந்திராவின் தந்தை குதிரையின் கால்களால் மிதிபட்டு திடீரென இறந்துவிடுகிறான். சந்திரா பக்கத்தில் உள்ள தன் அத்தையின் வீட்டிற்கு, ஒரு பஜனை கோஷ்டியுடன், செல்லும் பொழுது கொள்ளைக்கூட்டத் தலைவனான சசாங்கன் கையில் சிக்கிக்கொள்கிறாள். பிறகு சாமர்த்தியமாய் தப்பித்துக்கொண்டு, குகையில் தள்ளப்பட்டுள்ள தன் காதலனை இளவரசனை ஒரு சர்க்கஸ் கம்பெனியின் உதவி கொண்டு, யானைகளைக் கட்டி குகையின் முன்புறம் மூடப்பட்டிருந்த பாறையை அப்புறப்படுத்தி

"சந்திரலேகா"வில் ராஜகுமாரி அழகாக நடனம் ஆடுகிறார்

மீட்கிறாள். தானும் சர்க்கஸ் கம்பெனியிலேயே சேர்ந்து ஆடுகிறாள். இளவரசன் அவளுடனேயே தங்கி இருக்கிறான்.

இப்படியிருக்க ஒருநாள் ஆட்டம் நடக்கும் சமயம் சசாங்கனின் ஆட்கள் சந்திராவைப் பார்த்துவிடுகிறார்கள். இதை அறிந்ததும் அவர்களுக்கு தெரியாமல் சந்திராவும் இளவரசனும் தப்பி ஓடி ஒரு நாடோடி நடன கோஷ்டியில் கலந்து கொள்கிறார்கள். சசாங்கனின் ஆட்கள் அவர்களைப் பின் தொடர்ந்து, இளவரசன் வெளியில் போயிருந்த சமயம் சந்திராவை அரண்மனைக்கு பிடித்துக் கொண்டு போய் சசாங்கனிடம் சேர்ப்பிக்கிறார்கள்.

இதையறிந்த இளவரசன் முரசாட்டத்திற்கு ஏற்பாடு செய்யும்படி சந்திரலேகாவுக்கு ரகசியச் செய்தி அனுப்புகிறான். முரசாட்டம் நடக்கும் சமயம் ஒவ்வொரு முரசின் உள்ளிருந்தும் இளவரசனின் வீரர்கள் வெளிவந்து, போரிட்டு, சசாங்கனை கைது செய்கிறார்கள். வீரசிம்மன் தன் பெற்றோர்களை விடுவிக்க, தன் காதலியை மணந்து கொள்கிறான்.

சந்திரலேகாவாக டி. ஆர். ராஜகுமாரி நடிக்கிறாள். இளவரசன் வீரசிம்மனாக வருவது எம். கே. ராதா. இரண்டாவதுபிள்ளை சசாங்கனாக ரஞ்சன் நடிக்கிறார். சர்க்கஸ் கம்பெனியிலிருந்து சந்திரலேகாவிடம் அரண்மனைக்கு தூது போகும் கோஷ்டியில் தான் சுந்தரிபாய், கிருஷ்ணன், மதுரம் வருகிறார்கள். சர்க்கஸ் கம்பெனியில் கணக்குப்பிள்ளையாக நடிப்பது நாராயணராவ். நடிகர்களைப்பொறுத்தவரையில் எல்லோருமே அவரவர்கள் பாகங்களை கன கச்சிதமாய் நடித்திருக்கிறார்கள்.

சசாங்கனாக நடிக்கும் ரஞ்சனுக்குத் தான் இந்தப் படத்தில் நடிப்பில் முதல் ஸ்தானம் தரலாம். கலாட்டா செய்யும்பொழுதும், கொடூர நெஞ்சத்துடனும், கடும் சொற்களுடனும், முடுக்காகவும், கன பிகுவுடனும் கொடுங்கோல் ஆட்சி புரியும் அரசனாக திறம்பட நடித்திருப்பது ரொம்பவும் பாராட்டத் தக்கதே. இளவரசன் வீரசிம்மனாக நடிக்கும் எம். கே. ராதாவின் நடிப்பு "பரவாயில்லை" என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

டி. ஆர். ராஜகுமாரியின் நடை, உடை, பாவனை, ஆட்டம், ஓட்டம், பாட்டு எல்லாம் இதுவரை அவர் நடித்துள்ள எல்லாப் படத்தையும்விட சந்திரலேகாவில் சிகரமாய் விளங்குகிறது. படம் ஆரம்பம் முதல் கடைசி வரை காட்சியளிக்கிறார். சசாங்கன் சந்திரலேகாவை துராக்ருதமாய் அருகில் வந்து பலவந்தப்படுத்தும் கட்டத்தில், மயக்கம் வருவதுபோல் நடிப்பது பிரமாதம். எந்த கிலேயில் தூக்கின

தலைவேதனை
மகில்.



சர்க்கஸ் காட்சியில் ராஜகுமாரி (சந்திரலேகா) . . .

லும், தூக்கி நிறுத்தினாலும், அப்படியே சசாங்கன் கையிலிருந்து வழுக்கி, வழுக்கி விழுந்து உயிரற்ற சவம் மாதிரி நடிப்பது ரொம்பவும் பாராட்டத் தக்கது.

வானளாவி நிற்கும் பிரம்மாண்டமான கொட்டகையில், அறுபது அடி உயரத்தில் கட்டியிருக்கும் ஆகாச ஊஞ்சலில், ராஜகுமாரி செய்யும் பார் வித்தைகள், நம்மை பிரமிக்கச் செய்கின்றன. ராஜகுமாரி, பாடியுள்ளபாட்டுக்களில், "பாலன் கருணை புரிவான்" என்னும் பாட்டு மிக நன்றாயிருக்கிறது.

என். எஸ். கிருஷ்ணன், மதுரம், சுந்தரிபாய், நாராயணராவ், இவர்கள் படத்தில் நல்ல ஹாஸ்ய விருந்தை அளிக்கிறார்கள்.

படிப் பிடிப்பு, ஒலிப்பதிவு, எடிட்டிங், காட்சி அமைப்பு, இவையெல்லாம் பிரமாதமாய் உள்ளன. காட்சி ஜோடனைகள், குதிரைகளின் ஓட்டங்கள், மலைகள், மடுவுகள், சாலைகள், குளங்கள், குன்றுகள், எல்லாம், மேல் நாட்டுப் படங்களில் உள்ளது போலுள்ளன. சந்திரலேகாவில், காசில்லாமல் சர்க்கஸையும் பார்த்து விடுகிறோம்.

படம் மூன்றே முக்கால் மணிநேரம் ஓடுவதே தெரியவில்லை. பார்த்த காட்சிகளையே திரும்பத், திரும்ப பார்க்க ஆசை அதிகரிக்கிறது. படம் முடியும் கடைசி கட்டத்தில்தான், பிரம்மாண்டமான டமார நடனம் நடை பெறுகிறது. நூற்றுக் கணக்கான டமாரங்களின் மீது ஆண் பெண்கள் ஆடும் நடனங்கள் கண் கொள்ளா காட்சியாய் விளங்குகிறது. மேற்படி நடனம் உச்ச நிலையில் வரும்பொழுது பின்னணி சங்கீதமும் அதற்கு தகுந்தாற்போல அமைத்திருப்பது பாராட்டத்தக்கது. —"ராதா"

டி. ஆர் மஹாலிங்கம்

வாழ்க்கை வர்ணனை

"நான் சினிமாவில் சேர விரும்புகிறேன். இதற்கான வழி என்ன!" என்று என்னிடம் நூற்றுக்கணக்கான வாசகர்கள் கேட்டிருக்கிறார்கள்; இன்னமும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு நான் இதுவரை சரியான பதிலைத் தெரிவிக்கவேயில்லை, காரணம், "சினிமாவில் சேருவதற்கான—சரியான—சுலபமான மார்க்கம் எது?" என்பது எனக்கே தெரியாததுதான். ஆனால் டி. ஆர். மஹாலிங்கத்தின் சினிமாப் ப்ரவேசத்தைப்பற்றி நான் தெரிந்து கொண்டதும், இந்த நேயர்களுக்கு ஒரு புது விதமான பதிலைத் தெரிவிக்க நினைக்கின்றேன் அதாவது, "உங்களுக்கு சினிமாவில் சேர விருப்பம் இருந்தால் உங்கள் வீட்டிலோ, பொது மைதானமொன்றிலோ சதா பாடிக்கொண்டிருங்கள். அதிர்ஷ்ட தேவதையின் கிருபா கடாக்ஷம் பட்டும் உங்களுக்கிருந்தால் கட்டாயம் ஒரு "எட்டு ரூபாய் நோட்டு கிருஷ்ணய்யர்" தாமாகவே வந்து, உங்கள் பாட்டைக் கேட்டுவிட்டு, உங்களை வற்புறுத்தி சினிமாவில் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார்" என்பதாகும்.

"எட்டு ரூபாய் கிருஷ்ணய்யரா? அந்தப் பேர்வழி யாரையா அது!" என்று விழிக்கிறீர்களோ? சரிதான், டி. ஆர். மஹாலிங்கத்தைச் சினிமாவில் கொண்டு வந்து சேர்த்தவர் "ஒன்பது ரூபாய் நோட்டு ராயய்யர்" என்ற விநோதமான பெயருடைய ஒரு நடிகர்தான் என்பது உங்களுக்குத் தெரியாதல்லவா? . . .

ஒருநாள் இந்த ஒன்பது ரூபாய் நோட்டுப் பேர்வழி (யாருக்காவது ஒரு பத்து ரூபாய் நோட்டிற்கு ஒன்பது ஒற்றை ரூபாய்களை சில்லரையாகக் கொடுக்கும் நோக்கத்துடனோ என்னவோ!) அவசரமாய் போய்க்கொண்டிருந்தார். அவசரமாய்ப் போய்க்கொண்டிருந்த அவரது கவனத்தை ஒரு வீட்டினுள்ளிருந்து வந்து கொண்டிருந்த "தக்கோர் அபிமான" என்ற கர்ந

துன்னூசி



☆

மிருத கானம சவர்ந்து நிறுத்தியது. கால்கள் அவரை உத்திர வில்லாமலே உள்ளே இழுத்துச் சென்றன. சுமார் 12-வயதுள்ள டி. ஆர். மஹாலிங்கம் கிட்டப்பாவின் பிரபல நாடகப் பாட்டுகளை அதே வழியில் அதி இனிமையாய்ப் பாடிக் கொண்டிருந்தார். ஸ்ரீ. ராமய்யர் அவைகளைக் கேட்டு புளகாங்கிதம் அடைந்து போனார்.

மறுநாள் வருவதாகச் சொல்லிப் போன ராமய்யர் சும்மாத் திரும்பி வரவில்லை. மஹாலிங்கத்தைச் சினிமாவில் சேர்த்துவிடும் தீர்மானத்துடன் திரும்பி வ்நதார். அவர் மஹாலிங்கத்தை "நந்த குமார்" படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்த ஸ்ரீ. ஏ. வி. மெய்யப்பச் செட்டியாரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார். ஸ்ரீ. மெய்யப்பன் மஹாலிங்கத்தின் பாட்டைக் கேட்டதும் அப்படியே பிரமித்து விட்டார். தம் படத்தின் கிருஷ்ணன் வேஷத்திற்கெனவே மஹாலிங்கம் பிறந்திருப்பதாக அவருக்குத் தோன்றியது போலும். இரண்டாம் பேச்சேயில்லாமல் அவர் மஹாலிங்கத்தை அந்த நிமிஷமே ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டார்.

"நந்த குமார்" படத்தில் மஹாலிங்கம் இரண்டாவது கிருஷ்ணனாக நடித்திருக்கிறார். முதல் கிருஷ்ணன் இரண்டாவது கிருஷ்ணனாக மாறும்போது, மஹாலிங்கம் "யுக தர்ம முறையே" என்ற ரவிச் சந்திரிகா ராகப் பாட்டை கணீரென்று பாடிக் கொண்டே காக்ஷி அளிக்கிறார். அதுவரை பாதி மூடிய கண்களுடன் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மஹாலிங்கத்தின் வெண்கலத்வனியைக் கேட்டதும், மின்சாரத்தால் தாக்கப்பட்டவர்களைப்போல் நிமிர்ந்து உட்கார்ந்து, வாய் பிளந்தவண்ணம் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார்கள். "கிட்டப்பாவின் அவதாரம் இவன் தான்!" என்ற வார்த்தைகள் எல்லோர் வாயினின்றும் ஏகோபித்துக் கிளம்பின. இத்துடன் வேஷப் பொருத்தமும், துறு துறுப்பான நடிப்பும் மஹாலிங்கத்திடம் காணப்பட்டதால் "நந்த குமார்" ஒன்றின் மூலமே மஹாலிங்கம் பட ரஸிகர்களின் பூரண அபிமானத்தையும் பெற்று நக்ஷத்திரமாகி விட்டார்.

சினிமாவிற்கு வருவதற்கு முன்னர் மஹாலிங்கம் சில வருஷங்கள் நாடக மேடையில் பால பார்ட்டாக விளங்கி வந்தார். பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்ட மஹாலிங்கத்திற்கு படிப்பில் அக்கரை செல்லவில்லை. ஐந்தாவது வகுப்போடு தம் படிப்பை முடித்துக்கொண்டுவிட்டார். அவரது ஆசையெல்லாம் சங்கீதத்தின் பேரிலேயே இருந்தது. இதை அறிந்த மஹாலிங்கத்தின் தகப்பனார் ஒரு ஜொஸியனி



டம் மஹாலிங்கத்தின் ஜாதகத்தைக் காட்டினார். அவனும் மஹாலிங்கம் சங்கீதம், நாடகப் போன்ற கலைகள் மூலம்தான் புகழ் பெறுவார் என்று சொல்லி விட்டான். ஆதலால் தம் பிள்ளையை அவன் போக்கிலேயே விட்டு விட அவர் தீர்மானித்தார்.

இந்த சமயத்தில் ஜகன்னாத ஐயரின் பால மோஹன ரஞ்சித சங்கீத சபா சோழவந்தானில் முகாமிட்டு நாடகம் ஆடி வந்தது. அவர்களுக்கு நன்றாகப் பாடி நடிக்கக் கூடிய பையன்கள் தேவையாயிருந்ததால், கம்பெனியின் மேனேஜரான ராமசுப்பையர் மஹாலிங்கத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு, மஹாலிங்கத்தின் சொந்த ஊரான தென்கரைக்குச் சென்று அவரை ஒப்பந்தம் செய்து கொண்டு அழைத்துச் சென்றார்.

தற்போது சினிமா உலகில் உள்ள அநேக நடிகர்கள் மேற்சொன்ன நாடகக் கம்பெனி மூலம் உருவானவர்களே என்பது குறிப்பிடத் தக்கது. இக்கம்பெனியில் அப்பொழுது எஸ். வி. வெங்கடராமன் (தற்சமயம் சங்கீத டைரெக்டராக இருப்பவர்) கதாநாயகனாக நடித்து வந்தார். இந்த சபையின் நாடகங்களில் மஹாலிங்கம் பாட்டின் மூலம் புகழ் பெற்றார்.

ஆனால் அவர் இந்தக் கம்பெனியில் ஒன்றரை வருஷ காலமே இருந்தார். பிறகு இதை விட்டு விட்டு டி. பி. பொன்னுசாமி பிள்ளையின் பால கான சபாவில் அவர் சேர்ந்து கொண்டார். இந்தக் கம்பெனியில் அவர் நான்கு வருஷகாலம் இருந்த பின்னர் அதிலிருந்து விலகினார்.

அதன் பிறகு மஹாலிங்கம் ராஜபார்ட் கோவிந்தசாமி பிள்ளையிடமும் கொச்சப்ப நாயரிடமும் ஸ்பெஷல் நாடகங்களில் நடிப்பதற்காகப் பயிற்சி பெற்றார். இலங்கை உள்பட பல ஊர் மேடைகளிலும் அவர் ஸ்பெஷல் நாடகங்களில் நடித்து நல்ல புகழ் பெற்று வந்தார்,

அவர் நாடகங்களில் நடித்து வந்தபோது நிகழ்ந்த ஒருசம்பவத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஆரணியில் நாடகம் ஆடிக்கொண்டிருந்தபோது, அங்கு ஒரு சபாவில் சி. எஸ். செல்வரத்தினம் பிள்ளையின் கச்சேரி செய்வதற் ஆர், காலஞ்சென்ற ஸ்ரீ எஸ். சத்திய

மூர்த்தி அவர்கள் தலைமைவகிப்பதற்கும் ஏற்பாடாகியிருந்தது. ஆனால் எக்காரணத்தாலோ ஸ்ரீ. பிள்ளை அன்று வர முடியாமற் போய்விட்டது. கொட்டகைக்குள் ஜனங்கள் கூச்சலிட்டு ஆரவாரம் செய்தனர். ஸ்ரீ. சத்தியமூர்த்தி மேடைமீது ஏறி, ''ஸ்ரீ. பிள்ளையவர்கள் வராததால் மாஸ்டர் மஹாலிங்கம் பாடுவார்'' என்று அறிவித்ததும் ஆரவாரம் நின்று விட்டது. பாட்டைக் கேட்ட பின் மஹாலிங்கத்தைப் புகழாதவர்களே யில்லை.

மறுநாள் ஸ்ரீ. சத்தியமூர்த்தி மஹாலிங்கம் நடித்த நாடகத்திற்குச் சென்று, தலைமை வகித்தார். நாடகத்தினிடையில் ஸ்ரீ. சத்தியமூர்த்தி, ''க்ஷீர சாகர சயன'', ''எவரினி'' ஆகிய இரு கீர்த்தனைகளையும் பாடும்படி மஹாலிங்கத்தைக்கேட்டுக்கொண்டார். உத்ஸாக மேலீட்டுடன் மஹாலிங்கம் அப்பாட்டுகளை அதிக இனிமையாய்ப் பாடி பலத்த கரகோஷத்தைப் பெற்றார். ஸ்ரீ சத்தியமூர்த்தி மேடை மீது ஏறி, மஹாலிங்கத்திற்கு ஒரு தங்க மெடலைத் தம் கையாலேயே குத்திவிட்டார். அந்த மெடலைத் தான் மஹாலிங்கம் 22ம் பக்கத்தில் வெளியாகியுள்ள போட்டோவில் அணிந்து கொண்டிருக்கிறார் அந்த சமயத்தில் மஹாலிங்கத்திற்கு சுமார் பனிரெண்டு வயது தான் ஆகியிருந்தது.

நாடகக் கம்பெனிகளிலிருந்து விலகி மஹாலிங்கம் ஸ்பெஷல் நாடகங்களுக்குப் போய்க் கொண்டிருந்த சமயத்தில் தான் ஸ்ரீ. ஒன்பது ரூபாய் நோட்டு அவரைச் சந்தித்து சினிமாவில் சேர்த்து வைத்தார். ''நந்தகுமார்'' வெளியானதும் மஹாலிங்கத்திற்குச் சினிமா உலகில் ஏக கிராக்கி ஏற்பட்டு விட்டது உடனடியாக அவருக்கு ஸென்ட்ரல் ஸ்டுடியோ தயாரித்த ''பிரஹலாதா'' ''சதி முரளி'' ஆகிய இரு படங்களிலும் நடிப்பதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. மேற்படி இரண்டு படங்களுள் முந்திய படத்தின் மூலம் அவருடைய புகழ் அதிகரித்தது. பிந்திய படத்திலோ அவர் குடுமியுடன் தோன்றியது ஒன்றுதான் கண்ட பலன்.

இப்படங்களைத் தொடர்ந்தாற்போல மஹாலிங்கம் ''வாமனவதாரம்'', ''பரசுராமர்'' ''பூலோகரம்பை'' ஆகியமூன்று படங்களில் நடித்தார். இப் படங்களிலெல்லாம் அவர் விஷயத்தில் பிரத்தியேககவனம்செலுத்தப்பட்டதாகவோ, அல்லது தம் வரையில் அக்கறையாக நடந்து கொண்டதாகவோ காணப்படவில்லை. ''பூலோக ரம்பை''யில் மட்டும் அவர் தாம் முன்பு பெற்ற பெயரை ஓரளவு காப்பாற்றிக் கொண்டார்.

''இடம் மாற்றம் உடம்புக்கு நன்மையை அளிக்கும்'' என்று டாக்டர்

''கோமதியின் காதலன்'': ''டேய், சுகுமார்! அதோ பாருடா! உங்கம்மா வைத்திண்டிருக்காளே; அந்தக் குழந்தை யாருன்னு சொல்லு பார்க்கலாம்?''

கள் சொல்லுவார்கள். அது போல ஸ்டுடியோ மாறினாலாவது, வாடிக் கொண்டு வந்த தம் புகழை மீண்டும் தளிர்க்கச் செய்யலாமா என்ற எண்ணம் மஹாலிங்கத்திற்கு ஏற்பட்டிருக்கக் கூடும். அதற்கு இணங்கத்தான் போலும், அவர் கோயமுத்தூர் ஸென்ட்ரல் ஸ்டியோவை விட்டு, சேலம் மாடர்ன் தியேட்டர்ஸிற்குச் சென்று. அங்கு தயாரான படங்களில் நடிக்க ஆரம்பித்தார். "தயாளன், மாயா ஜோதி, சதி சுகன்யா, மனோன்மணி, பக்த ஹநுமான" ஆகிய ஐந்து படங்களும் வெளிவந்து வெற்றிகரமாயும் ஓடின. வேஷத்தை மாற்றினாலாவது துரதிர்ஷ்டம் மாறுமா என்ற எண்ணத்தினால் முதலில் "சதி சுகன்யா" படத்திலும் பிறகு "பக்த ஹநுமான"லும் மஹாலிங்கம் நாரதர் வேஷத்தைப் போட்டுக் கொண்டு நடித்துப் பார்த்தார். ஆனால் இந்த முயற்சிகளெதனாலும், நாளடைவில் மங்கிப் போய்க் கொண்டிருந்த மஹாலிங்கத்தின் புகழைத் தேக்கி நிறுத்த முடியவில்லை. "தாஸிப் பெண்" (ஜோதி மலர்) அவரது புகழை மேலும் ஒருபடி கீழே இறக்கிவிட்டது.

"மஹாலிங்கத்தின் மன தெய்வம்" : "என்னடா, சுகுமார்! உங்கப்பா மடியில் இருக்கிற ஜோரிலே உன்னையே உனக்கு அடையாளம் தெரியல்லையாடா?"

"நந்த குமார்" படத்திற்குப் பிறகு அதவ்வளவு மஹாலிங்கத்தின் பாட்டு வேறு எந்தப் படத்திலும் சோபிக்கவில்லை. நடிப்பும் மேற்சொன்ன படங்களிலெல்லாம் சுமாராகவே இருந்தது. இருந்த போதிலும் அவர் மீது பட ரஸிகர்களுக்கு அருவை ஏற்படாததும், அவருக்குப் பட முதலாளிகள் இடைவிடாமல் நடிக்கச் சந்தர்ப்பம் அளித்து வந்ததும் அவர் செய்த புண்ணியம் காரணமாய்த் தானிருக்க வேண்டும்.

மேற்சொன்ன படங்களில் மஹாலிங்கத்தின் பாட்டுகள் சோபிக்காமற் போனதற்கு காரணம் அவர் அசிரத்தையாயிருந்தார் என்று சொல்லிவிட முடியாது. அல்லது அந்தப் பழியை மேற்படிப் படங்களின் முதலாளிகள் மீது சுமத்துவதும் நியாயமாகாது. இதற்கான உண்மைக் காரணம் வேறு. மற்றெல்லா ஆண்களுக்கும் ஏற்படுவது போலவே மஹாலிங்கத்திற்கும், பால்யப் பருவத்தைக் கடந்து வாலிபப் பருவத்தை அடைந்ததும் தொண்டை உடைந்து குரல் உருத் தெரியாமல் மாறத் தொடங்கியது. "ஸ்ரீ வள்ளி" படத்தில் நடிப்பதற்குச் சில மாதங்கள் முன் வரை அவர் "மக்கர்" செய்து வந்த தம் தொண்டையுடன் இடைவிடாது போராடி வந்திருக்கிறார். கடைசியில். இந்தப் போராட்டத்தில் மஹாலிங்கத்திற்கு வெற்றி கிட்டியது.

"ஸ்ரீ வள்ளி"யைத் தயாரித்து வந்த ஸ்ரீ. ஏ. வி மெய்யப்பன் கம்படத்தில், (அச்சமயம் சினிமாவுலகில் புகழ் மங்கிப் போயிருந்த) மஹாலிங்கம், குமாரி ருக்மணி ஆகிய இருவரையும் பிரதம பாகங்களில் போட்டு தைரியமாய்ப் படம் தயாரிக்க முற்பட்டார் அப்படம் சாதாரண வெற்றியையாவது பெறும் என்று கூட யாராலும் தைரியமாய்ச் சொல்ல முடியவில்லை. இந்த "அக்னிப்பரீக்ஷை"யில் ஸ்ரீ. மெய்யப்பன் நிச்சயம் தம் விரல்களைச் சுட்டுக் கொள்ளுவார்" என்று பலர் வெளிப்படையாகவே சொல்லி வந்தனர் இப்படிச் சொல்லி வந்தது ஸ்ரீ. மெய்யப்பனின் காதுகளில்கூட விழுந்திருக்கும், ஆனால் அந்த அசகாய சூரர் இவைகளையெல்லாம் கேட்டு அயர்ந்து விடாமல், முன் வைத்த காலைப் பின் வைக்காமல், ஸ்ரீ ஏ. டி. கிருஷ்ணசாமியின் துணையுடன் "ஸ்ரீ வள்ளி"யை வெளிக்கொண்டு வந்து எல்லோருக்கும் ஒரு சந்தோஷகரமான ஏமாற்றத்தை அளித்து விட்டார்!

"ஸ்ரீவள்ளி" எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக அமோக வெற்றியைப் பெற்றது. மாஹாலிங்கத்தின் பாட்டும், நடிப்பும் புளி கொண்டு துலக்கிய வெண்கலம் போலப் பிரகாசித்தன. "நந்தகுமார்" படத்திற்குப் பிறகு "ஸ்ரீ வள்ளி" வரையில் வேறு எந்தப் படத்திலுமே மஹாலிங்கத்தின் பாட்டுகள் இவ்வளவு சோபிக்காமலிருந்ததால், "ஒருவனை இரவல் குரல் வாங்கப் பட்டிருக்குமோ" என்று சிலர் சந்தேகித்தனர், "கிட்டப்பாவின் இசைத் தட்டுகளையே வைத்து எடுத்திருப்பார்களோ?" என்று கூர்ந்து கவனிக்கச் சக்தியில்லாத பலர் கேட்டனர். "கிட்டப்பாவின் இசைத் தட்டிலுள்ள பிருகாக்களையும். மஹாலிங்கத்தின் பாட்டையும் கலந்து பதிவு செய்திருக்கிறார்கள்" என்று ஒரு "பிரஹஸ்பதி" எழுதி விட்டார்!

ஆனால் இப்படியெல்லாம் நினைப்பதும், சொல்லுவதும். எழுதுவதும் சுத்த அபத்தமாகும். இப்படி இனியும் யாராவது சொன்னால், அதை ஒன்று அவர்களது ஞான சூன்னியத்திற்கு உகாரணமாகவோ. அவர்களுக்குள்ள துவேஷத்தின் எல்லையாகவோ தான் கொள்ள வேண்டும்.

"ஸ்ரீ வள்ளி"யில் நடிப்பதற்குச் சற்று முன் மஹாலிங்கத்தின் சாரீரம் நல்ல நிலைமையை அடைந்து விட்டது என்பது ஒரு புறமிருக்க, ஸ்ரீ மெய்யப்பன் அபாரமான அக்கறை எடுத்துக்

கொண்டு அவரது சாரீரத்தை பரிபக்குவமாகப் பதிவு செய்யும்படிச் செய்திருக்கிறார் "நந்தகுமார்" மூலம் அவர் நமக்களித்த அதே மஹாலிங்கத்தைப் பல வருஷங்களுக்குப் பிறகு, மீண்டும் "ஸ்ரீவள்ளி" மூலம் புதுமெருகு கொடுத்து அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இன்று மஹாலிங்கம் ஒரு லக்ஷ ரூபாய் நக்ஷத்திரமாய் விளங்குவதற்கு இந்த "ஸ்ரீவள்ளி" படமும்; ஸ்ரீ. மெய்யப்பனின் தைரியமான முயற்சியும் உழைப்பும் தான் காரணம் என்று சொல்வது மிகையாகாது.

"ஸ்ரீவள்ளி"க்குப் பிறகு மஹாலிங்கம் ஸ்ரீ மெய்யப்பனின் "நாம் இருவர்" படத்தில் நடித்து தம் முதல் வெற்றியை ஊர்ஜிதப் படுத்தினார். அதோடு கூட, "புராணப் படம் மட்டுமென்ன? சமூகப் படம் கிடைத்தால் கூட வெளுத்து வாங்கி விடுவேன்" என்று அவர் கூறக்கூடியபடி அமைந்தது இப்படம்.

இவ்விரு படங்களும் அமோஹமான வெற்றியைப் பெறவே மஹாலிங்கத்திற்கும் அமோஹமான புகழ் ஏற்பட்டு விட்டது. லக்ஷக்கணக்கில் கொடுக்கக் கூடிய பட முதலாளிகள் அவரைச் சூழ்ந்து கொள்ள ஆரம்பித்துள்ளனர். அதன் பயனாக, ஸிடேடல் "ஞான சௌந்தரி", லாவண்யா பிக்சர்ஸின் "பாரிஜாதம்" ஆகிய படங்களிலும், ஏ. வி. எம். மின் "வேதாள உலக"த்திலும் ஏககாலத்தில் நடித்து வருகிறார். இவை தவிர ஏ.வி. எம் மின் "பவளக் கொடி", பக்ஷிராஜாவின் "பவனக் கொடி", மாடர்ன் தியேட்டர்ஸின் "ஆதித்தன் கனவு" ஆகிய படங்களில் நடிப்பதற்கு அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். மற்றும் ஸியாமளா பிக்சர்ஸார் திட்டம் போட்டுக் கொண்டிருக்கும் "முத்துமாலை"க்குக் கூட அவர் ஒப்பந்தம் செய்து கொள்ளப் படுவார் போலிருக்கிறது. இந்தப் படங்களெல்லாம் வெளிவந்ததும் மஹாலிங்கத்தை மேலும் உயர்ந்த ஸ்தானத்தில் கொண்டுபோய் வைக்கும் என்று தாராளமாய் எதிர்பார்க்கலாம்.

சினிமா உலகில் பிரமாதமான புகழைப் பெற்றுள்ள மஹாலிங்கத்திற்கு வயதென்னவோ கொஞ்சம் தான் ஆகிறது. ரத்தாக்ஷி வருஷம் ஆனி மாதம் 3-ந் தேதியன்று காலை (16-6-1924) அனுஷ நக்ஷத்திரத்தில் சைவ பிராமண குலத்தில் பிறந்தவர் அவர். சோழவந்தானை அடுத்த தென்கரை அவரது சொந்த ஊர் ஆகும்.

தசரதர் ஏக காலத்தில் மூன்று மனைவியரை மணந்து கொண்டிருந்ததாக கதை. ஆனால், மஹாலிங்கத்தின் தகப்பனாரோ ஒன்றன் பின் ஒன்றாய் மூன்று மனைவியரை மணந்து கொண்டார். அதற்கேற்ப, மஹாலிங்கத்திற்குப் பிறகு பிறந்த இரட்டைப் பிள்ளைகளுக்கு அவர் ''ராமன் — லக்ஷ்மணன்'' என்றும் பெயர் வைத்தார். மூன்றும் மனைவியின் இரண்டாவது புத்திரன் தான் மஹாலிங்கம். மஹாலிங்கத்துடன் பிறந்தவர்கள் மொத்தம் ஐந்து சகோதரர்களும், ஒரு சகோதரியுமாவர்.

பன்னிரண்டாவது வயதில் மஹாலிங்கம்

''மாயா ஜோதி'' படத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது அவருக்குத் திருமணம் நடந்தேறியது. மஹாலிங்கமும் கோமதியும் அன்பு மிக்க தம்பதிகளாய் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு சில வருஷங்களுக்கு முன் ஒரு ஆண் குழந்தை பிறந்து இறந்து போயிற்று. இப்பொழுது ஒன்னே முக்கால் வயதான சுகுமார் என்ற இரண்டாவது பிள்ளையை அவர்கள் மிகச் செல்வமாக வளர்த்து வருகின்றனர்.

இந்த உயரமும் மாநிற மேனியும் உடைய மஹாலிங்கம் சினிமாவுக்கேற்ற நல்ல முகத்தோற்றத்தைப் பெற்றிருக்கிறார்.



சுகுமாரும் அவனுடைய குதிரையும்

புராணம், சமூகம் ஆகிய இருவகைப் படங்களுக்கும் அவர் ஏற்ற நடிகராய் விளங்குகிறார். கத்திச் சண்டை, குதிரை சவாரி, மோட்டார் — மோட்டார் சைக்கிள் ஓட்டுதல், நீந்துதல் முதலியவைகளெல்லாம் அவருக்குத் தெரியும். அதோடு போட்டோ எடுப்பதில் அவர் ரொம்பவும் ஆசை மிகுந்தவர். இந்தப் பகுதியில் வெளிவந்துள்ள அவருடைய சொந்த போட்டோக்களெல்லாம் அவருடைய கேமிராவினால் அவராலேயே எடுத்துக் கொள்ளப் பட்டவைகளாகும்.

சினிமாவிலும், நாடகங்களிலுமே மஹாலிங்கம் புகழ் பெற்றிருக்கிறாரென்றாலும், அவருக்கு சங்கீதக் கச்சேரிகள் செய்து புகழ் பெற வேண்டுமென்பது தான் நோக்கமாம். இந்த எண்ணத்துடன் அவர் பால்யத்தில் திருமங்கலம் சேஷய்யங்கார், சங்கர மேனன், ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் ஆகியோரிடமெல்லாம் சிக்ஷை சொல்லிக் கொண்டிருக்கிறார். இன்னும் சில மாதங்களில் அவர் அடிக்கடி கச்சேரிகளைச் செய்யப் போகிறாராம்.

இவ்வளவு திறமைகளும், தகுதிகளும் மஹாலிங்கத்திடம் காணப்படுவதாலும், இருபத்தி நான்கு வயதிற்குள்ளாகவே சினிமாவுலகில் ஒரு லக்ஷ ரூபாய் நக்ஷத்திரமாகியுள்ளதாலும், அவர் எதிர்காலத்தில் இன்னும் உன்னத நிலைமையை அடைவார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

ஒண்டிசெனியைக் கேளுங்கள்

கே. எஸ். எஸ். மூர்த்தி (சிதம்பரம்)

சேலத்தில் கட்டுவதாயிருந்த ரத்ன ஸ்டுடியோ என்னவாயிற்று?

ஆவதென்ன? கட்டிடம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

டி. எம். கே. ராமலிங்கம் (ராசிபுரம்)

தென்னிந்திய சினிமாவில் மொத்தம் எத்தனை நக்ஷத்திரங்கள் உள்ளன?

கொஞ்சம் அவகாசம் கொடும்; எண்ணிச் சொல்கிறேன். அதற்குள் நீர் வானத்தில் எவ்வளவு நக்ஷத்திரங்கள் உள்ளன என்பதைத் தெரிவியும்.

ஏ. பி. பாண்டியராஜா (மதுரை)

வெற்றிலைபாக்கு உபயோகத்தினால் காவி ஏறிய பற்கள்கூட படங்களில் எப்படி வெண்மையாகவே காணப் படுகின்றன?

பட முதலாளிகளின் சாயமே வெளுத்துப் போகும்போது, இந்த பற்களின் சாயம் வெளுப்பதுதானா பிரமாத விஷயம்?

கே. குருஸ்வாமி (சிவகெங்கை)

நான் "......" காபி கம்பெனியின் சொந்தக்காரன். 'மிஸ் மாலினி'யான புஷ்பவல்லிக்கும், தங்களுக்கும் என் கையால் இரண்டு கப் காபி கொடுக்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு இருக்கிறது. இதற்கு என்ன சொல்லுகிறீர்?

ரொம்ப சரி! காப்பிக் கொட்டை கிடைக்காத இந்தக் காலத்தில், இரண்டு கப் என்ன, வருஷம் பூராவுமே நீர் உம் கையால் காபி கொடுப்பதாயிருந்தாலும் எங்களுக்குச் சம்மதமே! ஆனால் இதற்காக சிவகெங்கைக்கு எங்களை வரச் சொல்ல மாட்டீரே!

ஏ. வி. எஸ். மணியம் (ரக்வானா)

இந்த சினிமாப் பேய் எப்பொழுது இந்தியாவை விட்டுத் தொலையும்?

"ஆட்டி" வைப்பதற்கு ஆளில்லாமல் போகும் போதுதான்!

சி. ஆ. குப்புசாமி (சிதம்பரம்)

"பொதுஜனம் பேசுகிறார்" பகுதியில் நேயர்கள் பல குறைகளை எடுத்துக் காட்டுகிறார்கள். ஆனால் தியேட்டர் காரர்களோ சர்க்காரோ இக்குறைகளை நிவர்த்திக்க முயற்சிக்கிறார்களா?

பொதுஜன அபிப்பிராயத்தின் காரணமாக பிரிட்டிஷ் சர்க்காரே இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுத்திருக்கும்போது உமக்கேன் இந்தச் சந்தேகம்?

ஏ. பி. ஆதியப்பன் (அரிய கவுண்டன்பட்டி)

தாஸி அபரஞ்சியில் கிளி உண்மையாகவே பேசுகிறதா?

இல்லை; இது இரவல் குரல் யுகம் என்பது உமக்குத் தெரியாதா?

ச. கி. அசனுமுகம்மது ராவுத்தர் (பொன்னமராவதி)

டி. ஆர். ராமச்சந்திரன் நந்தகுமார் படத்தில் நடித்திருக்கிறாரா? இப்பொழுது எந்தப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்? விலாசம் தெரிவிக்க முடியுமா?

"காதல் மயக்கம்" டி. கே. ஷண்முகம், திரௌபதி ("பில்ஹணன்")

நீர் பலே கெட்டிக்காரரய்யா? "நந்தகுமாரி"ல் அவர் நடித்துள்ளதை எப்படி ஐயா கண்டுபிடித்தீர்? இப்பொழுது ராமச்சந்திரன் "சம்ஸார நௌகா", "கோகுலதாஸி" ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். விலாஸம் நெ. 9 கோட்ஸ் ரோடு, தியாகராயநகர், சென்னை—17.

எம். கோபால் (சென்னை)

கொத்தமங்கலம் சுப்பு எப்பொழுது பார்த்தாலும் தெய்யாங்கு மெட்டிலேயே ஏன் பாட்டுக் கட்டிக் கொண்டிருக்கிறார்?

அவருக்குத் தெரிந்ததைத் தானே ஸ்வாமி, அவர் செய்யமுடியும்?

கே. நாராயணன் (கொழும்பு)

மிஸ் மாலினியில் கொத்தமங்கலம் சுப்பு திறமையாக நடித்திருக்கிறார் என்பது என் அபிப்பிராயம். நீர் என்ன சொல்லுகிறீர்?

"நடிக்கிறார்" என்று எனக்குத் தோன்றவில்லை; "வாழ்க்கையை அப்படியே சித்தரிக்கிறார்" என்பது தான் பொருந்தும்.

எம். எஸ். கேசவன் (சித்தூர்)

காளமேகம் படத்தில் காளமேகமாக நடித்த திருவாடுதுறை ராஜரத்தினம் வேறு எந்தப் படத்திலாவது நடித்திருக்கிறாரா?

சினிமா நடிப்பென்ன பிரமாதம்? "ஊதி"த் தள்ளிவிடலாம் என்ற எண்ணத்துடன் வந்த ராஜரத்தினம், "காளமேகம்" வெளியானதும் அதில் அவரது உழைப்பு "மேளம் கட்டாத" விஷயமாயிருந்ததை அவரும் சரி; படமுதலாளிகளும் சரி தெரிந்து கொண்டார்கள். இல்லையென்றால் மறுபடியும் நடிப்பதற்கு அவரை யாரும கூப்பிடாமல் இருப்பார்களா? அல்லது அவர்தான் நடிக்காமலிருப்பாரா?

கே. எம். குப்புசாமி (சூளை)

நான் எழுதியிருக்கும் கடிதத்தை தந்திபோல் பாவித்து உடனே பதில் கொடுக்கவும்.

தந்தி போல் பாவித்துக் கொள்ளுவதில் எனக்கு ஆக்ஷேபனையேயில்லை.

"ஞானசௌந்தரி"யின் தகப்பனாக நடிக்கும் டி. பாலசுப்ரமண்யம்

ஏனென்றால், தந்தி இலாகாவினர் நாம் அனுப்பும் தந்திகளை சாதாரணக் கடிதங்கள் போலத்தானே பாவித்துக்கொண்டு தாமதப் படுத்துகிறார்கள்!

எஸ். பி. பழனியாண்டி (கொழும்பு)

எம். கே. தியாகராஜ பாகவதர் தயாரித்து வரும் ராஜமுக்தியில் என். எஸ். கிருஷ்ணனும் மதுரமும் நடிக்கிறார்களா? இல்லையென்றால் ஏன்?

நடிக்கவில்லை. ஜெயில் வாசத்தின் விளைவாக இருவரும் ஒரே இடத்தில் மட்டுமல்ல; படத்தில்கூட சேர்ந்து இருப்பதை விரும்பவில்லை போலிருக்கிறது.

டி. ஏ. எஸ். ஞானம் (திருச்செங்கோடு)

எம். வி. ராஜம்மாவின் சொந்த ஊர் எது? என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? விவாஹம் ஆகிவிட்டதா? தற்போதைய வயதென்ன?

மைசூரைச் சேர்ந்த ராஜம்மா, லிங்காயத் ஜாதியில்; சுமார் 28 வருஷங்களுக்கு முன் பிறந்தவர். அவருக்குப் பல வருஷங்களுக்கு முன்பே விவாஹம் ஆகிவிட்டது.

ராமலிங்கம் (சென்னை)

நாடக உலகில் புகழுடன் விளங்கி வரும் கே. ஆர். ராம்சிங்கை சினிமாவில் நடிக்க அழைத்தால் வருவாரா?

அவர் முன்பே "விஸ்வாமித்ரா" படத்தில் நடித்துவிட்டு வந்திருக்கிறார். வைரம் செட்டியார் தயாரித்துவரும் "குடும்ப வாழ்க்கை" படத்தில்கூட ராம்சிங் நடிக்கக் கூடும்.

"அருணன்" (நெல்லைகூடல்)

என் நண்பரொருவர் டி. ஆர். ராஜகுமாரியைப் பேட்டி காண விரும்புகிறார்.

உம் நண்பருடைய விருப்பம் சுலபமாக ஈடேற வேண்டுமானால், அவரை முதலில் ஒரு சினிமாப் பத்திரிக்கையை ஆரம்பிக்கச் சொல்லும்.

"பில்ஹணனி"ல் டி. கே. பகவதி, ஸரஸ்வதி

ஆர். எஸ். மணி (சிவகங்கை புதூர்)

எம். கே. ராதா, எம். எஸ். சுந்தரிபாய், புஷ்பவல்லி, நாராயணராவ் ஆகியோர் ஜெமினி படங்களைத் தவிர வேறு படங்களில் நடிக்காத காரணம் என்ன?

அவர்கள் ஜெமினியில் நிரந்தர சம்பளத்தில் நடிகர்களாய் அமர்ந்திருப்பதுதான் இதற்குக் காரணம்.

கே. துரைபாபு (கொசப்பேட்டை)

எம். எஸ். சரோஜா தற்போது எந்தப் படத்தில் நடித்து வருகிறார்?

அவர் தற்போது எந்தப் படத்திலும் நடிக்கவில்லை. ஆனால், தம் உடல் பருமனைக் குறைத்துக்கொள்ள முயல்வதற்காகவே அவர் சினிமாவிலிருந்து விலகியிருப்பதாக யாராவது சொன்னால நம்பவேண்டாம்.

வெ. பெ. மூக்கன் (மதுரை)

அனாதைப் பெண்ணில் அனாதைப் பெண்ணாக நடித்த .. சந்திரா என்ற

பெண் வேறு எந்தப் படத்திலும் நடிக்காத காரணம் என்ன? அவருடைய ஊர் எது?

அந்தப்படத்தில் நடித்தவர் சந்திரா அல்ல; சுந்தராம்பாள் என்பவர். இந்த சுந்தராம்பாள் படவுலகிலிருந்து அப்பொழுதே அனாதையாக விடப்பட்டு விட்டார். அவருடைய ஊர் சிதம்பரம் என்று கேள்வி.

எஸ். ஆர். கிருஷ்ணமூர்த்தி (மதுரை)

கோயமுத்தூர் ஜூபிடர் பிக்சர்ஸின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

ஜூபிடர் பிக்சர்ஸ், திருச்சி ரோடு, கோயமுத்தூர் என்று எழுதவும்.

பி. சிவராம ஆசாரி (காமன் கோட்டை)

எம். கே. டி. பாகவதர் எந்த அரசியல் கட்சியில் பற்றுதல் உடையவர்?

காங்கிரஸ் கட்சியிலும், காந்தீயத்திலும் பாகவதர் அபாரப் பற்றுதல் கொண்டிருக்கிறார்.

ஸி. ராமசாமி (வேதம்பாளையம்)

எம். எஸ். விஜயாளும், எம். எஸ். எஸ். பாக்கியமும் சகோதரிகளா?

இல்லை. ஆனால் எம். எஸ். எஸ். பாக்கியம் இருந்த அதே நாடகக் கம்பெனியில் இப்பொழுது எம். எஸ். விஜயாள் நடித்து வருகிறார்.

ஆர். மகாபுசான் (கோவில்பட்டி)

வனராஜ கார்ஸான் முதலிய படங்களில் நடித்த ஜான் கவாஸ் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

அந்தக் காட்டுமிராண்டி அதன் பின் என்னவானாரோ தெரியவில்லை.

எஸ். துரைராஜ் (தென்காசி)

சித்ரகலா மூவிடோன் தயாரித்த குமரகுருவில் நடித்த ஜெயபாலா தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

அந்தப் படத்தில் அவர் கண்ட "ஜெய"மெல்லாம் (அவருடைய) பெயரளவில்தான். ஆதலால் அவர் வேறு படங்களில் நடிக்காதது ஆச்சரியமான விஷயமல்லவே!

ஜி. ஆர். கோபாலன் (கோயமுத்தூர்)

ஆயிரம் தலைவாங்கியில் நடிக்கும் ஜானகிக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

அவருடைய கணவர் அருகிலிருந்தால், 'பட்'டென்று பதிலளித்திருப்பார்!

ஜி. நடராஜன் (நாகப்பட்டினம்)

டைரெக்டர் சாந்தாராம் தற்போது எங்கேயிருக்கிறார்? எங்கே தம் படங்களைத் தயாரிக்கிறார்?

பம்பாயில் இருக்கிறார். பம்பாயிலுள்ள தம் சொந்த ஸ்டுடியோவான

விரைவில் தயாராகி வரும் "ஆண்டாள்" தமிழ்ப் படத்தில் பி. கே. மாதவன்

ராஜ்கமல் கலாமந்திரில் அவர் தம் படங்களைத் தயாரிக்கிறார்.

ஆர். என். ராஜன்
(திருச்செங்கோடு)

சென்னை ராஜதானியில் இதுவரையில் மொத்தம் எத்தனை படங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன?

இதுவரை சுமார் 500 படங்கள் தயாரிக்கப் பட்டிருக்கலாம்.

டி. கே. ராஜகோபால்
(புதுக்கோட்டை)

மதனமாலாவில் நடிக்கும் ரஜனியின் சொந்த ஊர் புதுக்கோட்டையா? அவருடைய அசல் பெயர் கோவிந்தம்மாளா? அவருடன் நான் சிறு வயதில் படித்ததாக ஞாபகம்.

ரஜனியின் சொந்த ஊர் புதுக்கோட்டைதான். ஆதலால் நீர் அவருடன் படித்ததாகக் கூறுவது உண்மையாயிருக்கலாம். ஆனால் அவருடைய உண்மைப் பெயர் "ராஜபாலாகூட அல்ல; கோவிந்தம்மாள் தான்" என்று நான் திட்டமாகக் கூறுவதற்கான ஆதாரம் கிடைக்கவில்லை.

வி. பி. கிருஷ்ணன் (ஆரணி)

எம். எஸ். சரோஜினி இப்பொழுது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

பக்ஷிராஜாவின் "பவழக்கொடி"யில்

எம். ஏ. மாரிமுத்து (விழுப்புரம்)

என். எஸ். கிருஷ்ணன் ஜெயிலிலிருந்து விடுதலையான தேதியைத் தெரிவிக்கவும்.

சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் 25ந் தேதியன்று கிருஷ்ணன் விடுதலையானார்.

வி. கோவிந்தராஜுலு
(திருக்கோயிலூர்)

ஜீவஜோதியில் நடிக்கும் எம். எல். பதியின் சொந்த ஊர் எது? தற்போது அவர் எந்தப் படத்தில் நடிக்கிறார்?

பதியின் சொந்த ஊர் வாலாஜா பேட்டை. அவர் தயாரிக்கப்போகும் "மாயா சுந்தரி" தமிழ்ப் படத்தில் நடிப்பார் என்று நினைக்கிறேன்.

சௌதாமினி "ஆண்டாளி"ல் அற்புதமாக நடனம் ஆடுகிறாராம்

"கிராமபோன் ஊசி"
(திருவள்ளூர்)

குண்டூசி அண்ணா! எனக்கு சினிமாப் பார்ப்பதென்றால் மிகவும் ஆவல். ஆனால் என் வீட்டார் சினிமாப் பார்க்கக் கூடாதென்கிறார்கள். இதற்கு என்ன செய்வது?

அடியோடு சினிமாப் பார்க்கக் கூடாது என்று உம் வீட்டார் தடை செய்தால் அது அர்த்தமற்ற செய்கையாகும். ஆனால் மாணவர்கள் அடிக்கடி சினிமா பார்ப்பது கெடுதல்தான் என்பதையும் நீர் மறந்து விடக் கூடாது. ஆதலால் மாதத்திற்கு ஒன்றிரண்டு படங்களைப் பார்க்க உம் வீட்டார் அனுமதித்தால் நல்லது.

எம். கே. மூர்த்தி (திருவள்ளூர்)

தென்னிந்தியா, வடநாடு, மேல்நாடு, ஆகிய படங்களில் நீங்கள் எதை அதிகமாய் விரும்புகிறீர்கள்?

"ஆண்டாள்" படத்தில் ஆண்டாளாக நடிக்கும் யு. ஆர். ஜீவரத்னம்

தென்னிந்தியப் படங்களைத்தான்! ஏனென்றால் அவைகளைப் பார்க்கும் போதுதான் எனக்கு எழுதுவதற்கு நிறைய விஷயங்கள் அகப்படுகின்றன!

பி. பெரியசாமி (பண்ருட்டி)

சேலம் ஜில்லா அயோத்தியா பட்டணத்தில் சில மாதங்களுக்கு முன் ஒரு பெண்ணுடன் எஸ். பி. வேலப்பா என்பவர் வந்து தங்கினார். அவர் பவிரன் என்ற படத்தைத் தயாரிக்கப் போவதாகவும், இதன் கதையைத் தாமே எழுதி, அதில் தாமே நடிக்கப் போவதாகவும் என்னிடம் கூறினார். அப்படம் என்ன வாயிற்று?

இது மாதிரியேதான் அவர் வருஷக் கணக்கில் சொல்லிக் கொண்டிருக்கிறார். படம் தயாரிப்பதாகச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் சென்னையில் ஏராளமாய் இருக்கிறார்கள். சிலர் பத்திரிகைகளில் வெளியிடச் செய்த முதல் விளம்பரங்களுக்கே காசு கொடுக்க முடியாமல் தலைமறைவாய்த் திரிகின்றனர். வேலப்பாவுக்கு கதை, வசனம், நடிப்பு, —ஏன் டைரெக்ஷன், பாட்டியற்றுவது முதலியவற்றை யெல்லாம் தாமே செய்து விடுவது சாத்தியமாயிருக்கலாம். ஆனால் முதல் போடும் ஒரு விஷயத்திற்கு மட்டும்தான் அவருக்கு ஆள் கிடைக்க வில்லையாம்!

ஆர். எம். ஏ. ஆர். ஏ. சிதம்பரம் (பள்ளத்தூர்)

என். எஸ். கிருஷ்ணன் இது வரை எத்தனை படங்களில் நடித்திருக்கிறார்?

அறுபத்தி ஐந்து படங்களில் அவர் நடித்து வெளி வந்திருக்கின்றன.

கே. வி. துரைக்கண்ணு (சூலை)

நான் படங்களில் நடிப்பதற்கு மிக ஆவலாய் இருக்கிறேன். படமுதலாளிகள் எனக்கு 'சான்ஸ்' கொடுப்பார்களா?

நீர் படங்களில் நடிக்கும் யோசனையை விட்டுவிட வேண்டுமென்று உம்மைவிட நான் அதிக ஆவலாயிருக்கிறேன்!

கே. என். பிரேமாவதி (கோலசிலாங்கூர், மலேயா)

என் நண்பர் ஒருவர் டி. ஆர். ராஜகுமாரியின் மேல் ஏக்கமாயிருக்கிறார். இதற்கு என்ன செய்யலாம்?

அவர் கன்னத்தில் வீக்கம் ஏற்படும்படி ஒரு அறை கொடுத்தால் இந்த ஏக்கம் தீர்ந்து போகக் கூடும்.

ஆர். ரத்தினம் (கோலசிலாங்கூர்)

கே. எல். வி. வஸந்தாவின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

c/o மாடர்ன் தியேட்டர்ஸ், சேலம் என்று எழுதும்.

எஸ். ஞானசிகாமணி செட்டியார் (ஜோகூர்பாரு)

டி. எஸ். பாலய்யா எந்தப் படத்தில் பார்த்தாலும் காதல் விஷயத்தில் இறுதியில் தோல்வியுறுவதாகவே நடிக்கிறாரே, இதன் மர்மம் என்ன?

அதுவா; அவர் வெற்றி பெறுவதன் மர்மம் எல்லாம் இந்தத் தோல்வியுறும் விஷயத்தில் தானிருக்கிறது!

கே. யு. கே. முஹம்மது ஜான் (மன்னார்)

எம். கே. தி. பாகவதர் தற்போது நடித்துவரும் ராஜமுக்தி படம் எப்பொழுது வெளிவரும்?

இந்தப் படம் அதி துரிதமாய்த் தயாராகி வருகிறது. படம் பாதிக்குமேல் முடிந்து விட்டது. இரண்டு அல்லது மூன்று மாதங்களில் படம் பூர்த்தியாகி விடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

டி. எம். இப்ரஹீம் (ஹப்புத்தளை)

டி. ஆர். ராஜகுமாரி தற்போது எந்தெந்தப் படங்களில் நடிக்கிறார்?

கிருஷ்ணா பிக்சர்ஸின் "கிருஷ்ண பக்தி"யில் அவர் இப்பொழுது நடித்துவருகிறார்.

ஆர். சுப்பராமன் (பாளையங்கோட்டை)

ஒரே சினிமாப் படத்தை சில பத்திரிகைகள் உயர்த்தியும், சில பத்திரிகைகள் தாழ்த்தியும் எழுதுகின்றனவே எதனால்?

கலா சேவை ஒன்றையே கருத்தாகக் கொண்ட விமர்சகர்கள் கழுதையைக் குதிரை யென்றோ, குதிரையைக் கழுதை என்றோ ஒருக்காலும் சொல்ல மாட்டார்கள். எனவே உண்மையான விமர்சகரும், பத்திரிகையும் எது என்ற விஷயத்தில் வாசகர்களிடையே அபிப்பிராய பேதம் ஏற்படாமலிருந்தால், சரி!

"அசுரா" (அரியநாயகிபுரம்)

தற்போதுள்ள சினிமா உலக நிலைமையில் குடும்பப் பெண்கள் இதில் ஈடுபடுவது கூடாது என என் நண்பர் கூறுகிறார். ஆனால் குடும்பப் பெண்கள் சினிமாவில் ஈடுபட்டால்தான் தற்போதைய நிலைமை மாறும் என்று நான் கூறுகிறேன். நீர் என்ன சொல்லுகிறீர்?

ஒரு கொப்பரை விஷத்தில் ஒரு சொம்பு பாலை ஊற்றிவிட்டால் விஷம் பாலாக மாறிவிடாது. ஆதலால் பாலை வீணாக்குவதற்குப் பதில் விஷத்தை முதலில் அகற்றுவது தானே புத்திசாலித்தனம்?

டி. ரகோத்தமன் (சென்னை)

டி. ஆர். ராஜகுமாரி கட்டும் தியேட்டருக்கு என்ன பெயர் இடப்படும்?

இன்னும் தீர்மானமாகவில்லை. "நேதாஜி தியேட்டர்" என்று அழைக்கப் படலாம் என வதந்தி. என்னைக் கேட்டால், இத் தியேட்டருக்கும் "கன்னிகா குமாரி" என்று பெயரிடலாம் என்று கூறுவேன்.

என். முனுஸ்வாமி (சென்னை)

ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணியில் நடிக்கும் எஸ். வரலக்ஷ்மி தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

ஜெயபிரகாஷ் பிக்சர்ஸார் தயாரித்துவரும் "போஜனி"ல் அவர் இப்பொழுது நடித்துக் கொண்டிருக்கிறார்.

"பில்ஹணனி"ல் திரௌபதி நாட்டியமும் ஆடுகிறார்.

இ. ர. சிவப்ரகாசம்
(நாகரசம்பட்டி)

எம். கே. டி. பாகவதருக்கும், என். எஸ். கிருஷ்ணனுக்கும் மன வேறு பாடுண்டா ?

இவர்களுடைய மனங்கள் வேறு பட்டுள்ளன என்பதென்னவோ நிச்சயமாய்த் தெரிகிறது. ஆனால் இவர்களிடையே மன வேறுபாடு ஏற்பட்டிருக்கிறதா என்று நிச்சியமாய் சொல்வதற்கில்லை.

கந்தசாமி (பழனி)

டி. ஆர். ராஜகுமாரியின் சொந்த ஊர் எது ? வயது எத்தனை ?

வயது இருபத்தியாறு; சொந்த ஊர் தஞ்சாவூர்.

"சினிமாநாதன்" (காஞ்சீபுரம்)

சினிமா உலகில் பணம் சம்பாதித்துக் கொடுப்பவர்கள் யார் ? ஆண்களா ? பெண்களா ?

பெண்கள் தாங்கள் சம்பாதிப்பதைத் தாங்களே வைத்துக்கொண்டு விடுகிறார்கள். கொடுப்பதெல்லாம் இந்த ஆண்கள்தான் !

கொ. சி. பக்கிரிசாமி (ரங்கூன்)

எம். வி. ராஜம்மாவின் விலாஸம் என்ன ?

c/o திரன் கம்பெனி, நெ. 2 தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை 17 என்று விலாஸமிட்டு எழுதும்.

பி. எம். ஹனீப்
(திருப்பளாத்துறை)

சினிமா நடிகைகள் பெரும்பாலும் விவாஹம் செய்து கொள்ளாமலிருப்பதின் மர்மம் என்ன ?

மர்மம் பிரமாதமானதல்ல ; விவாஹபந்தத்திலிருந்து விடுபட்டவர்களே பெரும்பாலும் சினிமா உலகில் நிரம்பி யிருப்பதுதான் இதற்குக் காரணம்.

கே. ராஜமாணிக்கம்
(சொக்கலிங்கபுரம்)

குமாரி ருக்மணியின் சொந்த ஊர் எது ?

சென்னை நகரம்.

டி. ஆர். ராதாகிருஷ்ணன்
(ஜார்ஜ்டவுன்)

கன்னிகாவில் எம். எஸ். சரோஜினி பாடியுள்ள பாட்டுகள் அவராலேயே பாடப்பட்டவையா ? அல்லது இரவல் குரலா ? அவர் முதன் முதலில் நடித்த படம் எது ?

சரோஜினி முதன் முதலில் நடித்த படம் "கருடகர்வபங்கம்." "கன்னிகா"வில் அவர் பாடியிருப்பது சொந்தக் குரலில்தான்.

ஏ. எம். முத்து (ஈரோடு)

நாங்கள் நடத்திவரும் "மலர்" கையெழுத்துப் பத்திரிகை சம்பந்தமாக அநேக நடிக நடிகைகளுக்குக் கடிதம் எழுதியிருந்தோம். ஆனால் ஒரு சிலரிடமிருந்தே பதில்கள் வந்துள்ளன. அதுவும் அவைகளோ அவர்களே எழுதாமல் வேறு நபர்களை விட்டு எழுதச் செய்து கையெழுத்துப் போட்டனுப்பி யிருக்கிறார்கள். காரணம் என்ன ?

காரணம், நம் நடிக நடிகைகளில் அநேகருக்கு "கையெழுத்துப் போட மட்டும்தான்" தெரியும் என்பது தான் !

எஸ். கோவிந்தராஜுலு
(வில்லிவாக்கம்)

ரஞ்சன் இப்பொழுது என்ன செய்கிறார் ? எந்த ஊரில் பிறந்தவர் ? வயது என்ன ? கலியாணம் ஆகி விட்டதா? இப்பொழுது எந்தப் படத்தில் நடிக்கிறார் ?

ரஞ்சன் இப்பொழுது காற்றாய் பறந்து கொண்டிருக்கிறார்; விமானி அல்லவா ? திருவல்லிக்கேணியில் பிறந்த அவருக்கு முப்பது வயதாகிறது. கலியாணமாகி ஐந்து வருஷங்களாகின்றன. "சந்திரலேகா"வில் அவர் நாலு படத்து நடிப்பை ஒரேயடியாய் நடித்திருக்கிறாராம்.

சி. ராமசாமி (தேவப்பாளையம்)

ஏவி. எம். கம்பெனியிலிருந்து டி. ஏ. ஜெயலக்ஷ்மி ஏன் விலகி விட்டார் ?

"பிழைக்கும் வழி" அவர் கண்ணில் தென்பட்டதுதான் காரணமாயிருக்கும் !

ஸிடேடல் பில்ம்ஸின் "ஞான
சௌந்தரியி'ல் எம். வி.
ராஜம்மா இதுபோல தோற்
றம் அளிக்கிருர்

மரகதா பிக்சர்ஸாரின்
"பிழைக்கும் வழி"யில் டி. ஏ.
ஜெயலக்ஷ்மி பெருத்த புகழை
அடையப் போகிறாராம்

"கங்கணம்" படத்தின் மூலம்
திரைக்கு வந்த மேனகா
மீண்டும் "மின்மினி" யில்
நடிக்கிறார்

இ
“ஞான
ராஜம்ம

வ
“ சந்தி
'பிரமாத
அமைப்

கு

இடது
“சந்திரலே
நாற்றுக்க
பெண்கள்
நடனம் ஆ

வலது
“பக்த ஜ
படத்தில் ச
கணப

புறம் :
ளந்தரி" யில்
ின் தோற்றம்

★

புறம் :
லகா "வின்
ன காட்சி
ளில் ஒன்று

நீசி

ம் :
கா " வில்
க்கான
து போல
ிஞர்கள்

ம் :
தமிழ்ப்
ங்கபாணி,
பட்

லலிதா - பத்மினி சகோதரிகளில்
ஒருவரான பத்மினி "கோகுல
தாஸி"யில் கிருஷ்ணன் வேஷத்தை
ஏற்று நடிக்கிறார்



"அட, சிகாமணியே! கண் தெறித்து விழுந்துவிடப் போகிறது, ஜாக்கிரதை!" ("கோகுலதாஸி"யில் டி. ஆர். ராமச்சந்திரன்)

வெகு விரைவில் படவுலகில் பிர
சித்தி பெற்று வரும் லலிதா பத்மினி
சகோதரிகள் "ஞானசௌந்தரி"யில்
நடனம் ஆடுகிருர்கள்

*எல்லோரும் இன்புற

தமிழ் நாட்டு சினிமாக் கலை இப்பொழுது பெருமிதத்துடன் தலை நிமிர்ந்து நிற்க எத்தனிக்கின்றதெனலாம்.

பலதரப்பட்ட புதிய கதைகளும், பழைய கதைகளின் புதிய உருவங்களும் படமாக்கப் படுகின்றன. பல புதிய முகங்களும் அடிக்கடி தோன்றி ஓரளவு வெற்றி பெறுகின்றன.

ஆனால் இவ்விதம் மறுமலர்ச்சி பெறும் சில சிறந்த படங்களைத் தரிசிக்கும் பாக்கியம் இலங்கை நேயர்களில் மூன்றில் இரு சாராருக்குக் கிடைப்பதில்லை. காரணம்? அவை ஸ்ரீ லங்காவுக்கு வருவதில்லை என்றில்லை. வந்தன; வந்து கொண்டிருக்கின்றன. அப்படியிருந்தும் மூன்றில் இரண்டு சாரார் பார்க்கும் பாக்கியத்தை இழந்து விடுகின்றனர்.

இப்பொழுது இலங்கையில் மூன்று தமிழ் பிலிம் கம்பெனிகள் ஆட்சி செலுத்துகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு கம்பெனியின் படங்கள் மட்டுமே காட்டப் படுகின்றன. இதனால் மற்றப் பகுதியினர் நல்ல படமாக உள்ள படங்கள் பலவற்றைக் காண முடியாமல் போகின்றது. அப்படியே நல்ல படங்களைக் காணவேண்டுமென்றால் பல மைல்கள் தூரம் பிரயாணம் செய்யவேண்டியிருக்கும். இதனால் பண நஷ்டம், சரீரத்துக்கும் அலுப்பு ஏற்படுகிறது. நல்ல படமாக இருந்தாலும், இவ்வித கஷ்டங்களை முன்னிட்டுப் படங்களைப் பார்க்கப் போக மனம் இடந்தர மறுக்கிறது.

ஆகவே, ரஸிக கோடிகளைத் திருப்திப் படுத்துவதே தம் முக்கியமான நோக்கமாகக் கொண்ட பட் விநியோகஸ்தர்கள் ஒன்று பட்டு, எல்லாவிடங்களிலும் காட்டினால் மற்ற இடங்களிலுள்ள நேயர்கள் எல்லோரும் பார்த்துக் களிக்கச் சந்தர்ப்பம் வாய்க்கும். ரஸிகர்களும் பல மைல் பிரயாணம்செய்து கஷ்டப்படாமல் இருப்பார்கள். இதை இலங்கை படவிநியோகஸ்தர்கள் உடனே கவனிப்பார்களா?

வி. ஏ. சிங்காரவேல் முதலியார்,

இலங்கை

பட முதலாளிகளின் கடமை

இத்தனை நாள் வரை நம் படமுதலாளிகள் தேசியக் கொடியையும், காந்தி மகாத்மா போன்ற தலைவர்களையும் திரையில் காண்பித்து பணம் பறித்து வந்தார்கள். இனி தான் அவர்கள் உண்மை சொரூபம் தெரிய வேண்டும். நம் படமுதலாளிகள் உண்மையில் தேச பக்தி உடையவர்களானால், காந்தியடிகளிடத்தில் உண்மையான அன்பு உடையவர்களானால், அவர்கள் செய்ய வேண்டியது தேச முன்னேற்றத்துக்கான படங்கள் எடுக்க வேண்டியது தான். பிரிட்டிஷாரின் கட்டாயத்துக் குட்பட்டு யுத்தப் பிரசாரப் படங்களெடுத்த நம் படமுதலாளிகள், இனி ஒருவருடைய தூண்டுதலுமில்லாமல், மகாத்மாஜிக்குப் பிரியமான ஹிந்து—முஸ்லிம்ஒற்றுமை, ஹரிஜன முன்னேற்றம் ஆகிய பிரசாரப் படங்கள் எடுக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் தான் அவர்கள் காந்தியடிகளுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்தவர்களாவார்கள். இதைச் சர்க்கார் வற்புறுத்த வைத்துக் கொள்ளாமல் நம படமுதலாளிகள் நடந்து கொள்வார்களென்று எதிர்பார்க்கிறேன்.

எம். என். வெங்கடராமன்

மதுரை

சீர்திருத்தம்செய்வார்களா?

எங்கள் ஊரில் அமைந்துள்ள லக்ஷ்மி டாக்கிஸ் என்னும் கொட்டகைக்குச் சென்று, டிக்கட் வாங்குமிடத்தைக் கவனித்தால், மக்கள் டிக்கட் வாங்குவது ஒரு கோரக் காட்சியாகக் காணப்படுகி

றது. டிக்கட் வாங்கும் துவாரம் சிறியது. அதுவும் உயரத்திலிருக்கிறது. போதாக்குறைக்கு சிலர் டிக்கட் வாங்குவோர்களின் மேல் படுத்துக் கொண்டு பின்னுல் நிற்கும் ஜனங்களைத் தம் திருவடிகளால் ஆசிர்வதிக்கின்றனர். டிக்கட்டும் வாங்கி விடுகின்றனர். இதற்கெல்லாம் உட்பட்டு சென்றவர்களுக்குத்தான் டிக்கட் கிடைக்கும்.

புக்கிங் ஆபிஸில் இவ்வளவு துன்பம். உள்ளே சென்றுல் அதற்கு மேல்! கணக்கின்றி டிக்கட் வழங்குகின்றனர். ஜனங்கள் படம் காண்பிக்கும் திரையின் மேடையிலேயே உட்கார்ந்து கொள்கின்றனர். இடம் கிடைத்தால்தானே மற்ற இடத்தில் உட்கார? இங்கு காட்சி துவங்க கால நிர்ணயமே கிடையாது. சீட்டியும் 'டேய்' என்ற சப்தமும்கொட்டகையை அதிரச் செய்தாலொழிய ஆட்டம் ஆரம்பிக்கப் படுவதில்லை.

சில சமயங்களில் ஆண்களும் பெண்களும் கலந்து விடுவதால் கலவரம் ஏற்படுகிறது. ஆகையால் இவ்வித அசம்பாவிதங்கள் ஏற்படா வண்ணம் கவனிக்கும் படியும், பொது மக்களுக்கு செளகரியம் செய்து கொடுக்க வேண்டுமென்றும் கொட்டகையின் பொறுப்பாளியை கேட்டுக் கொள்கிறேன்.

கே. ஷேக் ஆதம்

திருவள்ளூர்

மனம் மாறவேண்டும்

எங்கள் ஊர் தியேட்டரில் ஒரு படம் காண்பிக்கப்பட்டு வரும் பொழுது தரை டிக்கட்டைப் பாதிப் பேருக்கு மட்டும் கொடுத்துவிட்டு அறையை மூடி விடுகிருர்கள். இதனுல் சிலர் அதிகக் கட்டணம் உள்ள மற்ற வகுப்புக்களுக்குச் சென்று விடுகிருர்கள். மற்ற வகுப்புக்களில் அளவுக்கு அதிகமாக நபர்களை விடுகிருர்கள்.

இதனுல் பொது மக்கள் தங்களுக்கு ஓய்வு கிடைத்த நாளிலாவது படத்தைப் பார்க்கலாம் என்றிருந்தவர்கள், அதிகக் கட்டணம் செலுத்த வழியின்றி கவலையுடன் விடு திரும்புகின்றனர். மேலும் அவர்களுக்கு அதனுல் சினிமா மேல் வெறுப்பு ஏற்படுகிறது. அப் படம் சமூகத்தொண்டு செய்யக்கூடிய படமாயிருந்தால், அப்படத்தை ஏழை மக்களைப் பார்க்கவொட்டாமல் தடுத்தது போலாகும். சுதந்திர இந்தியாவில் சமூகத் தொண்டின் பொருட்டு தயாரிக்கும் படங்களை இப்படிப் பொது மக்களைப் பார்க்கவொட்டாமல் தடுக்கும் தியேட்டர் முதலாளிகள் இனிமேலாவது மனம் மாறவேண்டும். மக்களின் சுகாதாரத்தையும், சமூக முன்னேற்றத்தையும் கருதி நல்லதனமாக நடந்து கொள்வார்களாக.

ஜே. போஸ்கோ

தூத்துக்குடி

விளம்பர மோசடி

சில தியேட்டர்களில் புதுப் படங்கள் வருவதாக விளம்பரம் செய்யப் படுகிறது. ஆனுல் அப்படங்களோ மேற்படி தியேட்டரில் அன்றுகாட்டப்படுவதில்லை. இதை அறியாத சிலர் புதுப் படத்தைக் காண பல மைல்களுக்கு அப்பாலிருந்து வருகின்றனர். தியேட்டரை அடைந்ததும், விளப்பரம் செய்யப்பட்ட புதுப் படம் காட்டப்படாததைக் கண்டு சோர்ந்து விடுகிருர்கள்.

உதாரணத்திற்கு இதைக் கூறுகிறேன். எங்கள் ஊர் அழகப்பா தியேட்டரில் "ஜம்பம்" நடந்து கோண்டிருந்தது. அதே சமயம் ஒரு பிரபல தமிழ் தினப் பத்திரிகையில் ஒரு பக்கத்தில், "அழகப்பா தியேட்டரில் ஜம்பம்" என்றும், மறுபக்கத்தில் "மதனமாலா" என்றும் (அதாவது ஒரே நாளில் நடப்பதாக) விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. இதை மோசடி என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது?

மற்றும் "அமராவதி" படம் முடிந்த பிறகும் அது அந்தத் தியேட்டரில் நடப்பதாக விளம்பரம் செய்யப்பட்டிருப்பதைக் காணச் சிரிப்புத் தான் வந்தது. பட முதலாளிகளும் விநியோகஸ்தர்களும் இம்மாதிரி விளம்பரம் செய்வதை உடனே நிறுத்த வேண்டும். பத்திரிகைக் காரர்களும் உண்மையை அறியாமல் இவ்விதப் பொய் விளம்பரங்களைப் போடாமலிருக்க வேண்டும்.

'டாக்கி நேசன்'

நாகர்கோயில்

---

*பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர்:

வி. ஏ. சிங்காரவேலு முதலியார்

அமுக்குவத்தை, அப் கோட்,

இலங்கை.

அக்கிரமம்!

காரைக்குடியில் மொத்தம் மூன்று சினிமா தியேட்டர்கள். அதில் ஸரஸ்வதி என்னும் தியேட்டரிலும், ராம விலாஸம் என்னும் தியேட்டரிலும் பெண்களுக்கு டிக்கட் கொடுக்க தக்க வசதியுடன் இடம் வைத்திருக்கிருர்கள். நடராஜா என்னும் தியேட்டரில் மட்டும் பெண்கள் டிக்கட் எடுக்கப் போனுல் பெண்களின் கையை இறுகப்பிடித்து டிக்கட் கொடுக்கிருர்கள். ராமவிலாசம் மாதிரி பெண்களுக்குப் பெண்களே டிக்கட் கொடுக்கும்படிச் செய்தால் ரொம்பவும் நலமாய் இருக்கும். இதை உடனே அத் தியேட்டர் முதலாளி செய்வாரென்று எதிர் பார்க்கிறேன்.

எஸ். கே. வாஸகம்
காரைக்குடி

கடமையும் ஒழுக்கமும்

வெள்ளையரின் நடை, உடை, ஆடல், பாடல், முதலியவற்றில் மோகம் கொள்ளும் நாம், அவர்களது பிரத்தியேகமான ஒழுக்கம், தேச பக்தி முதலியவற்றை ஆராய்ந்து அறிவதில்லை. அன்னவரின் நிர்வாகத்தில் இருந்து வரும் கொட்டகைகளில் முன்பு ஒவ்வொரு படக்காட்சியின் இறுதியிலும் ஏகாதிபத்திய சின்னங்களான, மன்னர் தம்பதிகள், யூனியன் ஜாக்கொடி,முதலியவை திரையிடப்பட்டு வந்தன. அவ்வமயம் அங்கு குழுமியிருப்போர் அனைவரும் தம்இடங்களிலே நின்று வணக்கம் செலுத்தி வந்தனர்.

இவ்வழக்கத்தை ஒட்டிய முறையில் சமீபத்தில் வெளியான சில படங்களின் இறுதியில் நம் தேசத் தலைவர்களின் திருஉருவம் பொருத்தி இருப்பது போற்றற் குரியது. மைசூர் போன்ற சமஸ்தானங்களிலும் இவ்வழக்கம் இருந்து வருகிறது. எனினும் அக்காட்சி திரையில் வருங்கால் நம் மக்கள் ஒழுங்கான முறையில் நின்று வணக்கத்தைத் தெரிவிப்பதில்லை. படக்காட்சி முடிவடையும் சமயம், அவசரமாகவும், அலங்கோலமாகவும் கொட்டகையினின்று வெளியேறுவதே நமது வழக்கமாகப் போய் விட்டது. மூன்று மணி நேரம் எவ்வகை ஆபாசக் காட்சிகளையும் பொறுமையுடன் சகித்து நோக்கும் நமக்கு படம் முடிவடையும்போது மாத்திரம் ஏனே அமைதி குலைந்து விடுகிறது.

ஜனங்களின் இந்த ஒழுக்கமற்ற முறை மாறவேண்டும். கொட்டகைக் காரர்களும் இவ்வகையில் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

கமாஸ், கோலார் தங்கவயல்

ஒழிக வீண் போட்டி

தமிழ்ப்பட உலகில் தற்போது வீண் போட்டி ஏற்பட்டிருக்கிறது. "பவளக் கொடி" என்ருல் ஏவி.எம். "பவளக் கொடி" பக்ஷிராஜா "பவளக் கொடி;" ஜெமினி "ஞானசௌந்தரி" சிடேட்ல் "ஞானசௌந்தரி;" டி.கே.எஸ். "பில்ஹணன்" முபாரக் "பில்ஹணன்" என்று இதே போல ஒரே கதையை பலர் படமாக்க முற்பட்டிருக்கிருர்கள்.

தமிழ்ப் படக்கலை போட்டியினுல் முன்னேறும் என்று ஒரு சிலர் கூறலாம். முன்பே பிடிக்கப்பட்ட கதையையும், ஒரு படத்திற்கு வேறு பெயர் கொடுத்து மறுபடியும் பிடித்தாலா படக்கலை முன்னேறும்? இதனுல் படக்கலை சீர்குலையவும், படமுதலாளிகள் நஷ்டம் அடையவும் தான் முடியும்,

போட்டி வேண்டியது தான்; ஒருவர் புராணப் படம் பிடித்தால், மற்ெருருவர் சிறந்த சமூகப் படத்தை சிரிய முறையில் தயாரித்து அதன் மூலம் பெருமையும் லாபமும் அடையும் விதத்தில் போட்டி இருக்க வேண்டும். இனியாவது படமுதலாளிகள் இவ்வித வீண் போட்டியை விட்டு சமூகத்தைச் சீர்திருத்தும் சிறந்த படங்களைத் தயாரிக்க முயல்வார்களாக.

பா. பாலசுப்ரமண்யன்
நெல்லிக்குப்பம்

மக்களின் லட்சியப் படங்கள்

தமிழ் சினிமாப் படங்கள் தமிழ் மக்களின் வாழ்க்கையில் உள்ள உன்னத லட்சியங்களை பிரதிபலிப்பதாய் இருக்க வேண்டும். படமுதலாளிகள் இம் முறையை கையாண்டால் தமிழ் மக்களின் பூரண ஆதரவுக்குப் பாத்திரமாவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

தற்காலத்தில் பெரும்பான்மையான தமிழ்ப் படங்கள் மக்களுக்கு கீழ்த்தரமான உணர்ச்சிகளும், எண்ணங்களும், செய்கைகளும் உண்டாக்கக் கூடிய முறையில் இருக்கின்றன.

ஆகையால் நம் படமுதலாளிகள் உன்னத லக்ஷியங்கள் கொண்ட கிராமியப் படங்கள், சமூகத்திலுள்ள ஊழல்கள், மனிதரிடையே உள்ள குறைபாடுகள் போன்ற படங்களைத் தயாரிக்க முற்பட்டால், மக்களின் அறியாமை அகல மார்க்கம் ஏற்படும். இனிமேலாவது படமுதலாளிகள் பணத்திலே கண்ணும் கருத்துமா யிராமல் மக்களின் லட்சியப் படங்களெடுக்க முற்படவேண்டும்.

துரை, மதுரை

இப்பொழுதெல்லாம் பட முதலாளிகளும், டைரெக்டர்களும் புகழடைந்த படக் கதையையோ, அல்லது படத்தின் வசூலை அதிகரிக்கச் செய்த ஒரு விசேஷ அம்சத்தையோ 'காப்பி' அடிக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

* * *

உதாரணமாக, கமலா நடனத்தால் ஒரு படம் வெற்றியடைகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே சில பட முதலாளிகள் (சம்பந்தமில்லாமல்) அதேமாதிரி தங்கள் படங்களிலும் கமலாவின் நடனத்தைப் புகுத்துவார்கள்.

* * *

இப்படி ஒருவரை ஒருவர் பார்த்து நல்ல காரியங்களைச் செய்தார்களானால் அவர்கள் காப்பி அடிப்பதை நான் ஆக்ஷேபிக்க மாட்டேன்.

* * *

ஆனால் 'காப்பி' அடித்தும் பையன் சைபர் மார்க்கே வாங்கினான் என்ற நிலைமை ஏற்படும் போது தான் அனுதாபமும் ஆத்திரமும் ஏற்படுகிறது.

* * *

(பேபி) கமலாவின் நடனத்தை **ஜகதலப் பிரதாபன், வள்ளி** ஆகிய படங்களில் கண்ட மற்ற சில முதலாளிகள் காப்பி அடித்து ஒருவாறு வெற்றியைக் கண்டு விட்டார்கள்.

ஆனால் காப்பி அடித்தும் சைபர் என்ற கதி **கடகத்தைத்** தயாரித்தவருக்கு ஏற்பட்டு விட்டது.

* * *

இம்மாதிரி மற்றொரு சைபர் வாங்கியவர்கள் **ஏகம்பவாணனை** உருவாக்கியவர்கள்.

* * *

நடனத்தை மட்டும் தான் இப்படி 'காப்பி' அடிக்கிறார்கள் என்று நினைக்க வேண்டாம். பின்னணி கீதம் சேர்ப்பதிலும் இந்தக் 'காப்பி' முறை தான் அனுசரிக்கப் படுகிறது.

* * *

ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாளின் பின்னணி பாடலால் ஒரு படம் வெற்றி பெற்றதைக் கண்டு, சமீபத்தில் ஒரு படத்தில் அதே பட்டம்மாளைக் கொண்டு பாட வைக்கப் பட்டது. பிரயோஜனம் நேர் மாறாகத் தான் இருக்கிறது! எல்லாவற்றிற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?

* * *

இம்மாதிரி மற்றவர்களைக் 'காப்பி' அடிக்கச் செய்யுமாறு நிலைமையை உண்டாக்குபவர் ஸ்ரீ. ஏவி. மெய்யப்பன் தான். அவர் எதையாவது புதிதாகச் செய்து, வெற்றியைக் கண்டாரானால் உடனே பல முதலாளிகள் அதே போலத் தாங்களும் செய்ய முற்

படுகின்றனர். ஆனால் அந்த 'அதிர்ஷ்டம்' தான் இவர்கள் பக்கமும் இருப்பதில்லை.

*   *   *

பலதை 'மேனு' முதலிலே செய்து விடுகிறார் என்பதற்கு இதோ ஒரு உதாரணம். சமீபத்தில் தாரா சௌத்ரி என்ற பிரபல நடன நக்ஷத்திரத்தை ஒப்பந்தம் செய்து கொண்டார். விளம்பரம் வந்தவுடன் மற்றும் இரு கம்பெனிகள் அந்த நக்ஷத்திரத்தை ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றன.

*   *   *

இதே மாதிரி தான் "ஜெய் ஹிந்த்" என்ற பதத்தை "மேனு" தான் முதலில் படத்தில் உபயோகித்துக் காட்டினார். வெற்றி கண்டது. இதைப் பின் பற்றி எத்தனை 'ஜெய் ஹிந்துகளும்' தேசியக் கொடிகளும் வந்தன. ஆனால் அவை தோல்வியைத் தானே கண்டன?

*   *   *

"மேனு" செட்டியார் செய்ததை 'காப்பி' யடிக்க முயலுகிறார்களே தவிர, அவரின் அதிர்ஷ்டத்தை இவர்களால் காப்பி யடிக்க முடியவில்லை.

*   *   *

சினிமா நடிகை பி. எஸ். சரோஜா சமீபத்தில் தாம் பயிரிட்ட மரத்திலிருந்த மாங்காய்களை டைரெக்டர் கே. சுப்ரமண்யத்திற்கு அனுப்பி வைத்தாராம்.

*   *   *

இதற்கு சில தினங்கள் பின்னர் சட்ட சபையில் "மாங்காய் ஏற்றுமதிக்குத் தடை உண்டா?" என்று விவாதம் நடைபெற்றதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று நினைக்கிறேன்.

*   *   *

இதைப் பார்க்கும் 'காண்டிமெண்ட்ஸ்' வியாபாரி யாராவது "சரோஜா மார்க் ஊறுகாய்களை உபயோகியுங்கள்—அவரது தோட்டத்திலிருந்தே பயிர் செய்யப் பட்டது" என ஒரு விளம்பரத்தைக் கொடுக்கலாமென்று எதிர் பார்க்கிறேன்.

*   *   *

இந்த இளம் நக்ஷத்திரம் செய்யும் தோட்ட வேலை இவ்வளவு பிரமாதமாக பத்திரிகைகளில் செய்தியாக அடிபடுவதைப் பார்த்த எனக்கு முதிர்ந்த நடிகை ஸ்ரீமதி. டி. பி. ராஜலக்ஷ்மியின் பேரில் அனுதாபம் உண்டாகிறது.

*   *   *

பாவம். நெடுநாளாகவே அவர் தம் தோட்டத்தில் கத்தரிக்காய், கீரைப்

"கோகுல தாஸி"யில் மந்திரிப் பதவி ஏற்றுள்ள சோமசுந்திரம்

பயிர் செய்வது யாருக்கும் தெரியாமல் போய் விடுகிறதே என்று தான். பழைய நடிகை செய்வதையெல்லாம் இப்போது யார் கவனிக்கிறார்கள் என்கிறீர்களா? வாஸ்தவம்தான்!

* * *

ரஞ்சன் விசிறிகள் என்று பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்ததும் எனக்கு ஒரு அவா உண்டாயிற்று. ரஞ்சன் விசிறிகள் என்ன சொல்லுகிறார்கள், பாராட்டுகிறார்களா என்று மேலும் படிக்க ஆரம்பித்தேன். என்ன ஆச்சரியம்! அது ரஞ்சன் மின்சார விசிறிகளின் விளம்பரம். இப்படி நக்ஷத்திரத்தின் பெயரைத் தாங்கி வியாபாரம் நடக்கிறது ஸார்!

* * *

என். எஸ். கிருஷ்ணன் தமாஷ் மனிதரல்லவா? சுக்ல பக்ஷத்தில் பிறந்த தம் குழந்தையை கிருஷ்ண பக்ஷத்தில் பிறந்தது என அவர் விளம்பரப் படுத்தி யிருந்தார். இதைப் படித்த ஜோதிடர் ஒருவர் சிரித்து விட்டு "என்ன ஸார், கிருஷ்ணன் தமாஷைப் பார்த்தீர்களா? சுக்லபக்ஷத்திற்கு கிருஷ்ண பக்ஷம் என்று மாற்றிச் சொல்லியிருக்கிறார்" என்றார்.

உடனே எனக்கொரு சந்தேகம் தோன்றியது. பக்ஷம் எப்படியாவது போகட்டும். பிறந்தது பெண் குழந்தை தானா என்று சந்தேகப் பட்டேன். ஏனென்றால் ஆண் குழந்தைக்குப் பதிலாக தமாஷாகப் பெண் குழந்தை என்று சொல்லி யிருப்பாரோ என்று கூடத் தோன்றியது.

* * *

என்னை விட ஒரு ஹாஸ்யப் பேர்வழி, "ஒரு வேளை குழந்தையே பிறக்காமலிருந்து, தமாஷாக குழந்தை பிறந்திருப்பதாகச் சொல்லி வருகிறாரோ" என்று ஒரு போடு போட்டாரே பார்க்கலாம்!

* * *

"கிருஷ்ண பக்ஷம்" என்றால் "கிருஷ்ணனுக்குப் பிடித்தது" என்று அர்த்தம் செய்து கொண்டால் இது (என். எஸ்.) கிருஷ்ணனின் பக்ஷத்து (பிடித்த) குழந்தை தானே என்கிறார் மற்றொருவர்.

எங்கள் வியாபார ஸ்தலங்கள்

பெங்களூர், பனாரீஸ், காஞ்சீவரம்,
பெங்கால் பட்டுப் புடவைகளுக்கும் இன்னும்
எல்லாவித ஜவுளி தினுசுகளுக்கும் பெயர்
— போனவை —

கால நிலையை அனுசரித்தே விலை

P.R. நாராயணசாமி அய்யர்

Branch :	பட்டு நூல்
Fancy Hall	ஜவுளி வியாபாரம்
சைனா பஸார்,	பெரியகடை வீதி,
திருச்சினாப்பள்ளி.	திருச்சினாப்பள்ளி.

புஸ்தகப் பொழுது

சந்திரலேகா

[ஆசிரியர்: ஷண்முகம் பி. ஏ. வெளியிட்டோர்: புது மலர் நிலையம், கோயமுத்தூர். விலை ரூ. 2-8-0. 176 பக்கங்கள்.]

சந்திரலேகாவை வெகு அருமையாக ஆசிரியர் சிருஷ்டித்திருக்கிறார்.

ஒரு ஜமீந்தாரின் இரு புதல்வர்கள். ஒருவன் துர் நடத்தையில் உழன்று மீண்டவன். மற்றவன் எப்பொழுதும் நல்லவனாகவே இருந்தவன். இவர்கள் நடுவில் அத்தை மகள் அழகு வனிதை சந்திரலேகா. அண்ணன் காந்தனுக்காக தம்பி கோசலன் தன் காதலி சந்திரலேகாவைத் தியாகம் செய்கிறான். ஆனால் விதிவசமாக சந்திராவைக் கலியாணம் செய்து கொண்ட சிறிது நாட்களுக்குள்ளாக காந்தன் திடீரென்று மாரடைப்பினால் மரணமடைகிறான். கோசலன் முன்பு சந்திராவின் வாழ்க்கையை — அண்ணனுக்காக — காதலைத் தியாகம் செய்து—பாழ்படுத்திய கோசலன் அவள் வாழ்க்கையை வளம் பெறச் செய்ய அவளை மறுமணம் செய்து கொள்கிறான்.

ஆசிரியர் மிகவும் தைரியமாக விதவையான அண்ணன் மனைவியை பிறகு தம்பி மணப்பதாகக் கதையை முடித்திருக்கிறார். இதை ஒரு புரட்சிகரமான செய்கை என்றே நான் கூறுகிறேன்.

இவ்வளவு நல்ல முறையில் அமைந்துள்ள நாவலில் சிறிது குறைபாடுகளும் இருக்கத்தான் செய்கிறது.

"அந்தத் துக்கத்தை ஆலாலசுந்தரம் பிள்ளை இயற்றிய அருமையான நாட்டியக் கலையில் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து வரலானாள்" (பக்கம் 31).

"என்னடா, என்ன சொன்னே. உ... ம்" என ஒரு மாதிரி வெறியில் இருந்தும் குறிக்கிட்டான். என்னதான் வெறியாயிருந்தாலும் அனந்தன் வார்த்தைகளிலிருந்த ஆபத்தை அவன் உணர்ந்து கொண்டான்" (பக்கம் 48)

இம்மாதிரி துண்டுகள் பல இருக்கின்றன. முதலில் குறிப்பிட்டதில் "யார் துக்கத்தை மறந்து வந்தார்" என்பதை அறிய வாசகர்கள் சிறிது நேரமாகிலும் கஷ்டப்பட வேண்டும். இரண்டாவதில் 'அவன் உணர்ந்து கொண்டான்' என்பதையும் அப்படியே கேட்கத் தோன்றுகிறது. இக் குறைகளை மறு பதிப்பிலாவது ஆசிரியர் திருத்தி விடுவார் என்று நம்புகிறேன்.

அருமையான துல்லிய வெள்ளைக் காகிதத்தில் அச்சிடப்பட்டு, மூவர்ண அட்டையுடன் திகழும் சந்திரலேகா அனைவரையும் வசியம் செய்யும் என்பதில் ஐயமில்லை.

சிரஞ்சீவி

[சிரஞ்சீவி: மாதப் பத்திரிகை. பதிப்பாசிரியர் சிரஞ்சீவி. சிரஞ்சீவி கன்ஸர்ன்ஸ், 1/186, மௌண்ட்ரோடு. சென்னை. 2 தனிப் பிரதி விலை அணா எட்டு.]

பதிப்பாசிரியர் "சிரஞ்சீவி" தனக்கென்று எதிலும் ஒரு வழியைச் சிருஷ்டித்துக் கொள்பவர். அதே காரணத்தினால்தான் 'சிரஞ்சீவி'யையும் மேல் நாட்டுப் பத்திரிகைகளுக்கொப்பாக ஒரு புது வழியில் வெளியிட்டிருக்கிறார். உண்மைக் கதைகள், உண்மையான படங்களுடன் 'சிரஞ்சீவி' வெளி வந்திருக்கிறது. கதைகள் உள்ளத்தைக் கவர்ந்து உணர்ச்சியைத் தூண்டுவனவாகவும், படங்கள் கண்களுக்குக் குளுமையாகவும் அமைந்திருக்கின்றன.

பதிப்பாசிரியர் சொல்வது போல, ஒவ்வொரு இதழையும் முன் இதழை விட பல அம்சங்களிலும் அபிவிருத்தியுடன் விளங்கச் செய்தால் 'சிரஞ்சீவி' ரஸிகர்களின் உண்மைப் பத்திரிகை

வாக விளங்கும் என்று நான் இப்பொழுதே ஜோஸ்யம் கூறுகிறேன்.

அசோகா

[அசோகா. மாதப் பத்திரிகை. நிர்வாக ஆசிரியர். வ. சுப்ரமணியம். 316 தங்க சாலைத் தெரு, சென்னை 1. தனிப் பிரதி விலை அணு எட்டு.]

பிரபல எழுத்தாளர் து. ரா. வைக் கௌரவ ஆசிரியராகக் கொண்டு வெளி வரும் 'அசோகா'வில் தமிழ் நாட்டின் பிரபல எழுத்தாளர்களின் கதை, கவிதை, கட்டுரைகள் ஏராளமாக இருக்கின்றன. து. ரா. வின் தொடர்கதை வேறு வருகிறது. தலைவர்களின் புகைப் படங்களும், வழவழப்பான ஆர்ட் அட்டையில் மூவர்ணப் படமும் அனைவரையும் கவர்ச்சி செய்துவிடும். ஆனால் இவ்வளவு இருந்தும் முதல் இதழிலேயே 'சங்கப் பலகை' என்ற தலைப்பில் சிலரது கடிதங்களை வெளியிட்டு, அதன் கீழ் ஆசிரியரின் பதில் குறிப்பு போட்டிருப்பது விரசமாக இருக்கிறது.

பல நல்ல அம்சங்கள் இருப்பதால் இக்குறையை மறந்துவிட வேண்டியது தான்.

அருணோதயம்

[அருணோதயம். மாதப் பத்திரிகை. ஆசிரியர்: கே. பி. சாரதி. ஒக்கிலிய தெரு. கோயமுத்தூர். தனிப் பிரதி விலை அணு மூன்று.

கட்டுரை, சிறு கதை, கவிதை, அழகான தலையங்கம், மற்றும் பாப்பா கதை, பட விமர்சனங்களுடன் வெளி வந்திருக்கிறது அருணோதயம். சிரிக்க, சுவைக்க சிந்திக்க என்ற பகுதி மிகவும் நன்றாக இருக்கிறது. அருணோதயம் இன்னும் நன்றாக வெளி வர நேயர்கள் ஆதரவு கிடைக்க வேண்டும்.

ஞானக்கடல்

[ஞானக்கடல். மாதப் பத்திரிகை. ஆசிரியர் தத்துவ ஞானி பூபதிதாஸர். ஞானக் கடல் காரியாலயம். கொழும்பு. தனிப் பிரதி விலை 50 சதம்.]

ஞானக்கடல் உண்மையிலேயே ஞானக் கடலாகத்தான் திகழ்கிறது. பல முகம்மதிய அறிஞர்கள் குர் ஆன் ஆராய்ச்சிக் கட்டுரை, குர் ஆனில் சோல்லப் பட்டிருக்கும் ஞான மார்க்க ரகசியங்கள் முதலியவைகளை நன்கு வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். மற்றும் உள்ளத்தை உருக்கும் சிறு கதைகள், கவிதைகளுடன் வழவழப்பான ஆர்ட் காகித அட்டையுடன் ஞானக்கடல் தோற்றமளிக்கிறது. ஞான மார்க்கத்தை விரும்பும் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய சஞ்சிகை.

ஸில்வர் ஸ்கிரீன்

[ஸில்வர் ஸ்கிரீன். ஆங்கில மாதப் பத்திரிகை. நிர்வாக ஆசிரியர்—என். கிருஷ்ணசாமி. கூட்டு ஆசிரியர்கள்: கே. ஏ. பத்மநாபன், பி. நாகராஜன், ஆர். சந்தானம். 23. உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை. தனிப் பிரதி விலை ரூபாய் ஒன்று.]

சிலவருஷ வனவாசத்திற்குப் பிறகு ஸில்வர் ஸ்கிரீன் புது மெருகுடன் வெளி வந்திருக்கிறது. டைரெக்டர் எல்லிஸ். ஆர்டங்கன் சினிமாவின் மகிமையைப் பற்றி அழகான கட்டுரை எழுதியிருக்கிறார். "பழி"(PAZHI) என்பவர் தியாகராஜ பாகவதரைப்பற்றி விமர்சனம் செய்திருப்பது மிக நன்றாக இருக்கிறது. திரைக்குப் பின்னால் என்ற தலைப்பில் எம். எல். டாண்டன் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். எஸ். சுந்தரராஜன் மற்றும் பலர் கட்டுரைகளும், சினிமாச் செய்தி, விமர்சனம் முதலியவைகளுடன், மூவர்ண அட்டை, ஆர்ட் படங்களுடனும் வெளி வந்திருக்கிறது. ஸில்வர் ஸ்கிரீன். ரஸிகர்களுக்கு இது ஒரு விருந்தாக இருக்கும் என்று நம்புகிறேன்.

பிலிம் சமாச்சார்

[சினிமா மாதப்பத்திரிகை. விலை அணு 8. ஆசிரியர்: எஸ். ஜி. ஐயர். கிடைக்கும் இடம்: பிலிம் சமாச்சார் ஆபீஸ் சென்னை 17.]

ஸ்ரீ. எஸ். ஜி. ஐயரை சினிமா உலகிற்கோ, வாசகர்களுக்கோ அறிமுகப் படுத்தவேண்டியதில்லை. அவருக்கு சினிமாப் பத்திரிகைத் தொழிலில் சுமார் 15 வருஷ அனுபவமுண்டு. "ஸில்வர் ஸ்கிரீன்" ஆங்கிலப் பத்திரிகைக்கும், கொஞ்சகாலம்தமிழ் "ஸில்வர் ஸ்கிரீன்" பத்திரிகைக்கும், பிறகு "மூவி ஹெரால்ட்" பத்திரிகைக்கும் அவர் ஆசிரியராயிருந்து நடத்தியிருக்கிறார். ஆதலால் "பிலிம் சமாச்சார்" பத்திரிகையை அவர் சிறந்த முறையில் நடத்துவார் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. இப் பத்திரிகையில் அறிவுக் கிளர்ச்சி உண்டுபண்ணும் கட்டுரைகளும், சினிமாச் செய்திகளும், கேள்வி பதில் பகுதியும், வர்ணப் படங்களும் அடங்கியுள்ளன. ஸ்ரீ. ஐயர் தம் முயற்சியில் நல்ல வெற்றி பெறுவாராக.

வரப்பெற்றோம்

காரைக்குடி அகிலாண்டம் கம்பெனியார் வெளியிட்டுள்ள "ஸர்வதாரி வருஷ சித்திரை விழா பஞ்சாங்க மலர்" வரப் பெற்றோம். காந்தி மஹானின் பிறந்த ஆண்டை "காந்தி சகாப்த" ஆரம்பமாய் இதில் வெளியிட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

காஷ்மீர் கைகுட்டை

வி. எஸ். வெங்கடேசன்

நீதிபதி சிவராம் கடந்த சில நாட்களாகவே எதையோ சதா சிந்தித்துக் கொண்டிருப்பவர்போல் காணப்பட்டார். ஓய்வு நேரங்களில் வழக்கமாக அவர் மனைவியிடம் குதூகலமாக பேசிக் கொண்டிருப்பார். மேலும் அவர் மனைவி சுந்தரி நன்றாகப் பாடக்கூடியவள்; அவரும் ரசிகர். பேசிக் கொண்டிருப்பதுடன் அவளைப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டுமிருப்பார். அவைகளெல்லாம் இப்பொழுது கிடையாது. எப்பொழுதும் அவர் சிந்தனையிலேயே மூழ்கிக் கிடந்தார்.

அவர் நிலையைக் கண்டு சுந்தரி மிகவும் கலவரம் அடைந்தாள். "தம் கணவர் ஏன் இப்படி இருக்கிறார்? நாம் ஏதாவது தப்பு செய்தோமா? அல்லது ஏதாவது வழக்கு சம்பந்தமாக அவர் அப்படியிருக்கிறாரோ?" என்று தனக்குத்தானே கேள்வி கேட்டு ஆராய்ச்சி செய்து பார்த்தாள். அவளுக்கு எவ்விதபதிலும் அவள் ஆராய்ச்சியில் கிடைக்கவில்லை. கவலையினால் அவள் மனம் பிதி அடைந்ததைத் தவிர வேறு ஒரு பயனையும் அவள் காணவில்லை.

அன்று காலையும் அப்படித்தான் சிவராம் இருந்தார். காபி அருந்தி காலைப் பத்திரிகையைப் பார்க்க உட்கார்ந்தவர், பத்திரிகையில் கவனத்தைச் செலுத்தாமல் வேறு எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் அங்குவந்த சுந்தரி அவர் நிலையைக் கண்டு திடுக்கிட்டாள். சில நாட்களாகவே அவள் கேட்க வேண்டும் என்று எண்ணியதைக் கேட்டறிய அவள் எண்ணினாள். "என் ஒரு மாதிரியாக உகார்ந்திருக்கிறீர்கள்? என்ன யோசனை?"

அவர் திடுக்கிட்டு, சிந்தனை கலையப் பெற்று, "என்ன கேட்டாய்?" என்றார்.

"நன்றாக இருக்கிறது? என்ன அப்படித் தீவிர யோசனை? எந்த ராஜ்யத்தைப் பிடிக்க இப்படி மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கூறிக் கொண்டே அவர் அருகில் சோபாவில் உட்கார்ந்தாள். அவள் அருகில் உட்கார்ந்ததும் அவர் சற்று தூர விலகினார். அது கண்டு சுந்தரி மேலும் கலவரமடைந்தாள்.

அவர் செய்கை அவளுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. ஒரு நாளும் அவர் அவள் அருகிலிருந்து விலகியதே இல்லை. அதனால் அவள் மனம் கலவர மடைந்தது. அவள் பதட்டத்துடன் "என்னதான் விஷயம் சொல்லுங்களேன்? என் இந்த மாதிரி என்னைச் சித்திரவதை செய்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

சிவராம் சாந்தமாக, "ஒன்றுமில்லை. ஒருவிஷயத்தைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறேன்" என்றார்.

"அதுதான் என்ன விஷயம் என்று கேட்கிறேனே? அதற்குப் பதில் சொல்லாமல் என்னவோ மர்மமாகச்

சொல்லுகிறீர்களே! சில நாட்களாக உங்கள் போக்கே ஒரு தினுசாக இருக்கிறது. வேளைக்குச் சாப்பிடுவதில்லை. சரியாகப் பேசுவதில்லை. முன்போல சந்தோஷமாக இருப்பதில்லை. உங்கள் செய்கை என்னைக் கொல்லாமல்கொல்கிறது. விஷயத்தையாவது சொல்லுங்களேன்" என்று கோபமும், கெஞ்சுதலும் கலந்த தொனியில் கேட்டாள்.

"ஒரு கேஸ் விஷயமாகத் தான் யோசித்து வருகிறேன்."

"என்ன கேஸோ தெரிய வில்லை. கோர்ட்டில் தான் இருக்கவே இருக்கிறது அந்தத் தொல்லை. வீட்டிற்கு வந்தாலுமா அது விடவில்லை?" என்று அலுப்புடன் சொன்னாள்.

"சாதாரண கேஸாக இருந்தால் நான் கவலைப் பட மாட்டேன். இது மிகவும் முக்கியமானது. பல சிக்கல்கள் இதில் இருக்கிறது. எப்படி இதைத் தீர்ப்பது என்றே யோசிக்கிறேன்."

"என்ன கேஸ் அது?"

"உனக்குத் தெரியும்! அந்த சங்கீத வித்வான் கொலை கேஸ்!"

சுந்தரியின் முகம் வெளுத்தது. அவள் தலை சுழல்வது போல் தோன்றிற்று. பார்வை குத்திட்டது. அப்படியே ஸ்தம்பித்து விட்டாள். அவள் நிலையை சிவராம் கவனித்தார். ஆனால் அதைக் கவனியாதவர் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

சிறிது நேரம் மௌனமாக இருவரும் இருந்தனர். பிறகு சுந்தரி தன்னைத் திடப்படுத்திக் கொண்டு "வித்வானைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் கொலை செய்திருப்பார் என்று எண்ணுகிறீர்களா?". என்று கேட்டாள்; அவள் குரலில் பயம் தொனித்தது.

அவர் அலக்ஷியமாக அவளைப் பார்த்துக் கொண்டே "ஹும், எப்படிச் சொல்வது? முகத்தைப் பார்த்தால் நல்லவன் போலத்தான் காணப்படுகிறான் வித்வான்; ஆனால் மனிதனின் முகக் குறியிலிருந்தே எப்படி குணநிசியங்களை அறிவது?" என்றார்.

"அதற்கில்லை நான் கேட்கிறது? இவ்வளவு பாண்டித்தியம் படைத்த அவர் ஒருவனைக் கொலை செய்வாரா?"

"அதை எப்படிச் சொல்லுவது என்று தான் முதலிலேயே சொன்னேனே!"

"நான் வேண்டுமானால் சத்தியம் செய்து சொல்லுகிறேன். அவர் செய்தே இருக்க மாட்டார். நீங்களும் தான் எத்தனை தடவை அவர் பாட்டைக் கேட்டிருக்கிறீர்கள். எப்படி, உள்ளம் உருகப் பாடுகிறார். அவருடைய கச்சேரி என்றால் ஜனங்கள் எப்படிக் கூடி விடுகிறார்கள்...யாராவது பொறாமைக்காரர்கள் வேண்டுமென்றே செய்து விட்டு அவர் மீது பழியைப்போட்டிருப்பார்கள்."

"அதென்னவோ எனக்குத்தெரியாது; சாட்சிகள் அவனுக்கு எதிராக இருக்கின்றன."

"அப்படியானால் நீங்கள் அவர் குற்றவாளி என்று கருதுகிறீர்களா?"

"அதையும் நான் எப்படிச் சொல்வது? அவனே ஒரு முட்டாளாக இருக்கிறான். கொலை நடந்த தினத்தில் தான் அங்கு இல்லை என்று மட்டும் கூறுகிறான். எங்கு இருந்தாய் என்று கேட்டால், பதில் சொல்ல மாட்டேன் என்கிறான். இப்படிச் செய்வது அவன் உயிருக்கே ஆபத்து என்பதை அவன் தெரிந்து கொள்ள வில்லை."

சுந்தரியின் முகம் மற்றும் ஒரு முறை மாறியது. அப்பொழுதும் சிவராம் அதைக் கவனிக்காமலில்லை. முன்போலவே அவள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு, "உண்மையாய்ச் சொல்லுங்கள். அவரை நீர் தண்டித்து விடப் போகிறீரா?" என்றாள்.

"நான் என்ன செய்வது? எல்லாம் என் கையிலா இருக்கிறது? சட்டப்படி தீர்ப்புச் சொல்லுவதுதான் என் வேலை. அவன் தப்பிக்க ஒரே வழிதான் இருக்கிறது. அவன் அன்று எங்கிருந்தான் என்பதைச் சொன்னால் தப்பித்துக் கொள்ளலாம்."

"இது தர்ம சங்கடமாக அல்லவோ இருக்கிறது! அவர் ஏதோ மனதில் வைத்துக் கொண்டு அதை மறைக்கிறார் போல இருக்கிறது.......இருந்தாலும் அவர் சொல்வதை நீங்கள் நம்புகிறீர்களா, இல்லையா?"

"நான் நம்பி என்ன பிரயோசனம்? அவன் அன்று இல்லை என்பதற்குச் சாக்ஷி வேண்டாமா? அது இருந்தால் இன்றே அவன் விடுதலை அடையலாம்."

அவள் அசந்து உட்கார்ந்து விட்டாள். முகம் வாடியது. கண்களை மூடிக் கொண்டு வலது கையை கன்னத்தில் வைத்துச் சாய்ந்து கொண்டாள்.

சிவராம் சிறிது நேரம் மௌனமாக அவள் நிலையைக் கவனித்தார். பிறகு "காஷ்மீர் கை குட்டை!" என்றார்.

சுந்தரிக்குத் தூக்கி வாரிப் போட்டது. கடந்த சில தினங்களாக அவர் எப்பொ

ழுதாவது இப்படிக் கேட்பது வழக்கம். ஏன் அதைப்பற்றிக் கேட்கிறார் என்று பலமுறை சிந்தித்திருக்கிறாள். இதே போல் அன்றும் சிந்தித்து முடிவு தெரியாமல் திகைத்தாள். பிறகு, “ அதற்கு இப்பொழுது என்ன வந்தது ?” என்றாள்.

“ ஒன்றுமில்லை. நாம் முன்பு காஷ்மீர் போயிருந்த போது நமது நண்பர் ஒருவர் நமக்காகத் தயார் செய்து கொடுத்தாரே அது நினைவிலிருக்கிறதா என்று தான் கேட்டேன்.”

அவள் பட பட வென்று “ நினைவில்லாமல் என்ன ? நன்றாக இருக்கிறது ” என்றாள். பிறகு முன் போலவே கையைக் கன்னத்தில் வைத்துக் கொண்டு கண்ணை மூடிக்கொண்டாள்.

சிவராம் சட்டென்று கைக் கடிகாரத்தைப் பார்த்தார். கோர்ட்டுக்குப் போக நேரமாகி விட்டதைக் கண்டு பத்திரிகையை வைத்து விட்டு சோபாவிலிருந்து எழுந்தார். சாப்பிட உள்ளே சென்றார்.

சிவராம் சாப்பிட்டு விட்டு, ‘டிரஸ்’ செய்து கொண்டு வந்த சமயமும் சுந்தரி அவர் போகும் போது உட்கார்ந்திருந்த இடத்திலேயே இருந்தாள். அவர் அவள் அருகில் வந்து, “ நேரமாகிறது; போய் வருகிறேன் ” என்றார்.

சுந்தரி சட்டென்று சிந்தனை கலைந்தவள்போல் கண் விழித்து எழுந்து, “ நேரமாகிவிட்டதா ?......இன்றுதானே அந்தக் கேஸ் தீர்ப்பு ?” என்றாள்.

“ ஆமாம்.”

“ அவரைத் தண்டித்து விடப் போகிறீர்களா ?”

“ அதை எப்படிச் சொல்வது?......... நீயேன் வீணாகக் கஷ்டப்படுகிறாய் ? கொலைகாரப் பயல்களுக்காக நாம் வருத்தப்படலாமா ?”

“ அப்படிச் சொல்லாதீர்கள் ? அவர் ஒரு நல்ல பாடகர் என்பதற்காக நான் இப்படிச் சொல்கிறேன். அவர் கொலை செய்திருக்கமாட்டார் என்று எனக்குப் பூரணமாக நம்பிக்கை யிருக்கிறது. எதையும் நன்றாக யோசனை செய்து தீர்ப்புச் சொல்லுங்கள் ” என்றாள்.

சிவராம் அவள் பேச்சு, முகமாறுதல், குரலின் வேகம்—எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கவனித்தார். ஆனால் சிறிதும் கவனிப்பதாக அவளுக்குக் காட்டிக் கொள்ளவில்லை. “சரி, பார்க்கலாம். நான் அநீதியாக ஒருவனையும் தண்டிக்க மாட்டேன். ஆனால் உண்மையையும் அறியாமல் விட்டுவிட மாட்டேன்” என்று அலட்சியமாகக் கூறிவிட்டு, அவளிடம் விடை பெற்று, தயாராக இருந்த காரில் ஏறிச் சென்று விட்டார்.

சுந்தரி அப்படியே உட்கார்ந்து விட்டாள். அவள் மனம் படபடத்தது. வித்வானுக்கு என்ன நேருமோ என்று ஏங்கினாள்.

அச்சமயம் வேலைக்காரி வந்து அவளைச் சாப்பிடக் கூப்பிட்டாள். மனம் வருந்திக் கொண்டிருந்த அவளுக்குச் சாப்பிடப் பிடிக்கவில்லை. ஆதலால் தனக்கு உடம்பு என்னவோ போலிருப்பதாகவும் சாப்பாடு வேண்டாமென்றும் சொல்லி வேலைக்காரியை அனுப்பி விட்டாள்.

சுமார் ஒருமணி நேரம் கடந்திருக்கும். யாரோ “ சுந்தரி !” என்று கூப்பிடுவது கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவள் தோழி பத்மா எதிரில் நின்றாள். அவளைக் கண்டதும் சுந்தரிக்குத் தூக்கி வாரிப் போட்டது. படபடப்புடன் “ என்ன ?” என்று கேட்டாள்.

“ என்ன என்று சாந்தமாகக் கேட்கிறாயே. விஷயம் தலைக்குமேல் போய்க் கொண்டிருக்கிறதே. உனக்குக் கொஞ்சம்கூட இரக்கமில்லையா ?” என்று கோபமாகக் கேட்டாள் பத்மா.

சுந்தரி அவள் சொன்னதின் கருத்தை யூகித்துக் கொண்டாள். “ அதற்கு நான் என்ன செய்வது ?”

“ என்ன செய்வதா ? உன்னால் ஒரு உயிர் அநியாயமாகப் போகப்போகிறதே; அதைப்பற்றி நீ சிந்தித்தாயா ?”

“ சிந்தித்து நான் என்ன செய்ய முடியும் ? என்னால் அந்த உயிரைக் காப்பாற்ற முடியுமா ?”

“ கட்டாயம் உன்னால் காப்பாற்ற முடியும், நீ வந்து உண்மையைச் சொன்னால் கட்டாயம் அவர் விடுதலை அடைந்து விடுவார்.”

“ நன்றாகச் சொன்னாய்! நான் வந்து சொல்கிறேன் !...... என் அந்தஸ்து, என் மரியாதை எல்லாம் அப்பொழுது என்ன ஆகிறது ?”

“உன் மரியாதை, அந்தஸ்துக்காகஒரு உயிர் போவதா ? அந்தஸ்து மரியாதை எல்லாம் அன்று எங்கே போயிற்று ? அவர் உன் எதிரில் உட்கார்ந்து ஒரு பாட்டுப் பாடிக் கேட்கவேண்டும் என்று நீ என்ன துடி துடித்தாய் ? அதையெல்

லாம் இதற்குள்ளாகவா மறந்து விட்டாய் ?" என்றாள் பத்மா கோபமாக.

"பத்மா, கோபிக்காதே. இப்படி நடக்கும் என்று நான் அன்று நினைக்கவேயில்லை. இந்தப் பாழும் பாட்டுப் பித்து அன்று என் மூளையைக் கெடுத்து விட்டது. இப்பொழுது நான் என்ன செய்வேன் !"

"என்ன செய்வேன் என்று சொல்வதில் பிரயோசனமே இல்லை. உடனே புறப்படு. இன்று தீர்ப்புக் கூறப் போகிறார்கள். போய் உண்மையைச் சொல்லு."

"அது முடியவே முடியாது. என் மானம் மரியாதை எல்லாம் போய் விடும். என் கணவரும் என்னை கேவலமாக எண்ணித் துரத்திவிடுவார். அவருக்கு உபகாரம் செய்யப் போய், என் கதி அதோ கதியாகி விடும். அது முடியவே முடியாது" என்று அழுவது போல் கூறினாள் சுந்தரி.

"உன்னால் முடியாவிட்டால் நானே போய்ச் சொல்லி விடுகிறேன். உனக்காக என் காதலனை விட்டு விடுவேனா ?" என்று படபடப்புடன் கூறி விட்டு வெளியே சென்றாள்.

சுந்தரி எவ்வளவு தூரம் கூப்பிட்டும் அவள் திரும்பிக் கூடப் பார்க்காமல் வேகமாக சென்று விட்டாள்.

சுந்தரி முன்னிலும் அதிக கவலை கொண்டாள். முகத்தை இரு கைகளிலும் புதைத்துக் கொண்டு சிந்திக்கலானாள். அன்றுதான் செய்த தவறைத் திரும்பவும் நினைவு படுத்திக் கொண்டாள்.

அது ஒன்றும் பிரமாதமானதல்ல. சிவராமன் அன்று ஒரு வேலையாக வெளியூர் சென்றிருந்தார். சுந்தரிக்கு வெகு நாளைய ஆசையான, அந்த சங்கீத வித்வானின் பாட்டை, தனிமையாய் எதிரில் உட்கார்ந்து கேட்க வேண்டும் என்பதைப் பூர்த்தி செய்ய பத்மாவை வேண்டிக் கொண்டாள். அவன் பத்மாவின் காதலன். சிக்கிரத்திலேயே அவளைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறவன். ஆதலால் தாம்பரத்திலிருந்து அவனை மாம்பலத்திலிருந்த நீதிபதியின் பங்களாவிற்கு பத்மா அழைத்து வந்தாள். சுந்தரியும் முன்னேற்பாடாக, வேலைக்காரர்களை வீட்டிற்கு அனுப்பி விட்டு தனிமையில் காத்திருந்தாள்.

பத்மா வித்வானை அழைத்து வந்ததும் சுந்தரி, பங்களாவின் கதவுகளை நன்றாக சாத்தி விட்டு வித்வான், பத்மா மூவருமாக ஒரு தனி அறைக்குச் சென்றனர். வித்வானை அதற்கு முன்பு சுந்தரி பார்த்திருந்தாலும் அன்று அவன் அழகு முன்னையும் விட அதிகமாகவே அவளுக்குத் தோன்றிற்று. அவன் பாட்டை விட அவன் அழகே அவள் ஆத்மாவிற்குத் திருப்தி அளித்து விடும் போலக் கூடத் தோன்றிற்று அவளுக்கு.

வித்வானுக்காக வாங்கி வைத்திருந்த தின்பண்டங்களை அவனுக்குக் கொடுத்து அவனை சந்தோஷப் படுத்திப் பாடச் சொன்னாள். அவனும் உள்ளம் உருகப் பாடினான். சுந்தரியும், பத்மாவும் மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்தனர். வெகு நேரம் பாடிய பிறகு

அவன் பாட்டை நிறுத்தினான். பாடியதால் அதிக களைப்படைந்திருந்தாலும் அவன் அழகிய முகம் வாடவில்லை. முகத்தில் அரும்பிய வியர்வை, முத்துக்கள் போல சுரந்து, அவன் அழகிய முகத்தை மேலும் அழகு செய்தது.

பேச்சு வாக்கில் சுந்தரி தன் கையிலிருந்த காஷ்மீர் கைக் குட்டையை காற்றுக்காக விசிறி போல் உபயோகித்தாள்.

அவ்வளவு அழகுள்ள கைக்குட்டையைக் கண்டறியாத வித்வான், அதைக் காட்டும்படி கேட்டான். அவளும் அதை அவனிடம் கொடுத்து அதன் பெருமையையும் சொன்னாள். அதை அவனே வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள்.

இந்தக் கட்டம் வந்ததும் சுந்தரியின் சிந்தனை கலைந்தது. அப்பொழுதுதான் அவள் கணவர் காஷ்மீர் கைக்குட்டையைப் பற்றிக் கேட்டது நினைவிற்கு வந்தது. ஒரு வேளை வித்வானிடம் இக் கைக்குட்டை இருந்ததை அவர் பார்த்து விட்டாரோ? விஷயம் தெரிந்து போய் தான் என்னைச் சோதனை செய்ய என் வாயிலிருந்தே விஷயத்தை அறிய எண்ணங் கொண்டே அப்படிக் கேட்கிறாரோ? அவள் மனம் தத்தளித்தது.

மணி ஒவ்வொன்றாக அதிகரித்துக் கொண்டே போயிற்று, சாயங்கால நேரமும் வந்தது. ஆனால் சுந்தரி மட்டும் இருந்த இடத்தை விட்டு அசையவேயில்லை. வேலைக்காரி வந்து சுந்தரியை காபி சாப்பிடக் கூப்பிட்டாள். சுந்தரி வேண்டாம் என்று சொன்னதைக் கேட்ட வேலைக்காரி பயந்து, “காலையிலேயிருந்து ஒண்ணும் சாப்பிடாமெ உட்கார்ந்திருக்கிறீங்க; என்ன உடம்பு? ஐயாவுக்கு வேணுமுன்னு சொல்லி அனுப்பட்டுங்களா?......கொஞ்சம் காப்பி மாத்திரம் சாப்பிடுங்க, அது ஒண்ணும் பண்ணாது” என்றாள்.

சுந்தரி கவலையால் எதுவும் சாப்பிட வெறுத்தாலும் வேலைக்காரியின் வேண்டுகோளுக்காக அலக்ஷியமாகக் காப்பி கொண்டு வரச்சொன்னாள்.

வேலைக்காரி காபி கொண்டு வந்து கொடுத்ததும் அதை வெறுப்புடன் ஒரே மடக்கில் குடித்து விட்டு எதிரிலிருந்த மேஜை மீது டம்ளரை வைத்தாள். எஜமானியின் செய்கையைக் கண்டு பயந்த வேலைக்காரி டம்ளரைக்கூட எடுக்காமல் உள்ளே போய் விட்டாள்.

சூரியன் மேல் திசையில் போய்க் கொண்டே இருந்தான். ஒளியும் மங்கிக் கொண்டே வந்தது. அப்பொழுதும் சுந்தரி தன் இடத்தை விட்டு எழுந்திருக்கவும் இல்லை; தன் சிந்தனையிலிருந்து தன் மனதை வேறு திசைக்குத் திருப்பவும் இல்லை. ஆனால் முன் போல் இல்லாமல் பார்வை மாத்திரம் வாசல் பக்கமே இருந்தது.

சூரியன் நன்றாக மேல் திசையில் மறைந்து விட்டான். இருள் கவ்விக் கொண்டது. விளக்குகள் ஏற்றப் பட்டன. அதுவரை உட்கார்ந்திருந்த சுந்தரி எழுந்தாள். வாசலுக்கும் உள்ளுக்குமாக நடந்தாள். அவள் மனம் படபடத்தது. கணவர் அன்றுவரை அவ்வளவு நேரம் கழித்து வந்ததேயில்லை. கோர்ட் முடிந்ததும் வருகிறவர் அவ்வளவு நேரமாகியும் வராததால் அவள் மனதில் பல எண்ணங்கள் தோன்றின.

அதே சமயம் பத்மா சொல்லிச் சென்றதும் அவள் நினைவிற்கு வந்தது.

சுந்தரியின் கற்பனை விபரீதமாகப் போயிற்று. பத்மா கோர்ட்டில் உண்மையைச் சொன்னதும் ஆத்திரங் கொண்ட தன் கணவர், வித்வானுக்குத் தூக்கு தண்டனை கொடுத்து, தன்னையும் வீட்டை விட்டுத் துரத்துவதாக அவள் மனக்கண் முன் தோன்றியது. உடனேயே வித்வான் தூக்கு மரத்தில் தொங்குவதாகவும், அவள் வீதியில் தன் தலைவிதியை நொந்து அழுது கொண்டு செல்வதாகவும், ஊரார் பார்த்துச் சிரிப்பதாகவும் அவளுக்குத் தோன்றிற்று. •

சுந்தரி திடுக்கிட்டாள். அவள் மனம் பதை பதைத்தது. தான் செய்த சிறு தவறு இவ்வளவு தூரம் வர ஏதுவாயிற்றே என்று ஏங்கினாள்.

மேலும் சிறிது நேரம் சென்றது. சுந்தரி முன்போல் சோபாவிற்கு வந்து உட்கார்ந்து கொண்டாள். அவள் பார்வை முன்னிலும் அதிகமாக வாசல்நோக்கிக் கொண்டிருந்தது. திடீரென்று ஹாரன் சப்தம் கேட்டது. அவள் பார்வை உன்னிப்பாயிற்று. அதேகணம்சிவராமனின் காரும் பங்களாவின் உள்ளே வந்து நின்றது. அவர் கையில் பத்திரிகை, காகிதக் கட்டுகளுடன் இறங்கினார்.

சுந்தரி அவரை எதிர் கொண்டு அழைத்து உட்காரச் சொல்லி, காபி கொண்டுவர வேலைக் காரியைக் கூப்பிட்டாள். அவரும் வந்த களைப்புத் தீர சோபாவில் உட்கார்ந்து, கொண்டுவந்த வைகளை மேஜையின் மீது வைத்தார். வேலைக்காரி காபி கொண்டு வந்ததும் அவர் அதைப் பருகிவிட்டு சுந்தரியின் முகத்தைப் பார்த்தார். காலையில் அவர் போகும் சமயம் இருந்ததைவிட அப்பொழுது மேலும் வாட்டமாக இருந்தது. அவள் கேஸ் விஷயமாக தன்னைக் கேட்பாள் என்று நினைத்திருந்தார்.

அவள் கேட்காததை அறிந்து, தானாகவே சொல்ல ஆரம்பித்தார். "சுந்தரி, கேஸ் என்ன ஆயிற்று தெரியுமா ?"

அவள் ஆவலுடன், ஆனால் பயந்தபடியே, "என்ன ஆயிற்று?" என்றுகேட்டாள்.

அவள் முக மாறுதலை அறிந்த சிவராம், " அவனுக்கு தூக்கு தண்டனை கொடுத்து விட்டேன் " என்றார்.

அவள் தலை சுழன்றது. கண்கள் பஞ்சடைவது போலத் தோன்றியது. கீழே விழுந்து விடுவோமோ என்ற பயத்தில் அவள் அப்படியே அருகிலிருந்த சோபாவில் உட்கார்ந்து சாய்ந்து விட்டாள், அதைக் கண்ட சிவராம் பத்திரிகையையும்,மற்றும் எதையுமோ அவள் அருகில் வைத்துவிட்டு, எழுந்து மாடிக்குச் சென்று விட்டார்.

சிறிது நேரத்திற்குப்பின் சுந்தரி தன்னை திடப்படுத்திக்கொண்டு சுற்றும் பார்த்தாள். அவள் அருகில் பத்திரிகை இருப்பதைக் கண்டு அதைப் பிரித்துப் பார்த்தாள், கொட்டை எழுத்துக்களில் வித்வான் விடுதலை அடைந்தார் என்று போட்டிருந்தது. அதைக் கண்டு அவள் ஆச்சர்யமுற்றாள். சற்றுமுன் தன் கணவர் 'தூக்கு தண்டனை கொடுத்து விட்டேன்' என்று சொன்னது தன்னைச் சோதனை செய்வதற்காக என்பதை உணர்ந்தாள். ஆனால் உடன் அவளுக்கு சந்தேகம் பிறந்து விட்டது, பத்மா சொல்லிச் சென்ற விஷயம் அவள் மனதை உறுத்திற்று.

அவள் சந்தோஷமும் வருத்தமும் கலந்து பத்திரிகையைக் கீழே வைக்கும் சமயம் ஒரு சில்க் கைகுட்டையும், மோதிரமும் அவள் கையில் தென்பட்டது. அவள் அதை எடுத்துப் பார்த்தாள். உடன் நினைவிற்கு வந்தது. அன்றிரவு அவள் காஷ்மீர் கைகுட்டையைக்கொடுத்ததும், வித்வான், தன் நினைவாக இருக்க வேண்டும் என்று சில்க் கைகுட்டை கொடுத்ததும், பிறகு அவன் அணிந்திருந்த நில மோதிரத்தை பார்க்க வாங்கி கீழே வைத்ததும் அவளுக்கு அப்பொழுதுதான் நடந்ததுபோல் தோற்றமளித்தது. அவை எப்படித் தன் கணவருக்குக் கிடைத்தன என்று சிந்திக்கலானாள். ஆனால் அதைக் கண்டு பிடிக்க அதிக நேரம் ஆகவில்லை.

அன்றிரவு அதிக நேரம் விழித்திருந்ததால், மறு நாள் காலையில் வித்வான் பங்களாவிலிருந்து போகும் சமயம் விட்டுப் போயிருக்கலாம். தானும் அதைப் பார்க்காததால், காலை ஊரிலிருந்து வந்த கணவர் கையில் அது அகப்பட்டிருக்கவேண்டும்என்பதை உணர்ந்தாள். இதனால் கணவர் தன்மீது தப்பெண்ணம் கொண்டிருக்கிறார் என்பதை யூகித்துக் கொண்டாள். ஆனால் காஷ்மீர் கைகுட்டை விஷயம்! அதுவும் அவளுக்குப் புரியாத மர்மமாக இருந்தது. ஒருவேளை வித்வானைப் பிடித்த சமயம் அவரிடம் இருந்திருக்குமோ என்று சிந்தித்தாள். அதைத் தவிர வேறு வழியே கிடையாது என்று தீர்மானித்தாள்.

இனி என்ன செய்வது என்ற பிரச்னை சுந்தரிக்குப் பிறந்தது. தன் கணவருக்கு எப்படி விஷயத்தைச் சொல்லித் தன்மீது கொண்டுள்ள தப்பெண்ணத்தைப் போக்குவது என்று யோசித்தாள். அவள் சிந்தனையைக் கலைப்பதுபோல சிவராம் அவள் அருகில் வந்து உட்கார்ந்தார். சந்தடி கேட்டு அவள் திரும்பிப் பார்த்தாள். கணவர் என்று தெரிந்ததும் "நீங்கள் விளையாட்டுக்காகத்தானே அவருக்குத்தூக்குத்தண்டனை கொடுத்து விட்டேன் என்றீர்கள் " என்று கேட்டாள்.

" நீ எப்படியிருக்கிறாய் என்று பரிசோதித்தேன்."

" நல்ல சோதனை ! அதிருக்கட்டும்; நீங்கள்தான் சாட்சியமெல்லாம் அவருக்கு விரோதமாகஇருக்கிறது என்றீர்களே ! இப்பொழுது எப்படி அவரை விடுதலை செய்தீர்கள் ?"

"ஓ, அதுவா! அது பெரிய விஷயம்."

"என்ன சொல்லுங்களேன்"

"இன்று கோர்ட் நடந்து கொண்டிருக்கும் சமயம் ஒரு திடுக்கிடும் படியான சம்பவம் நடந்தது. திடீரென்று வித்வானின் வக்கீல், 'தன் கட்சிக்காரர் சார்பில் ஒருவர் சாட்சி சொல்ல வந்திருக்கிறார்! அதுவும் இந்தக் கேஸுக்கு மிகவும் முக்கியமான சாட்சி' என்றார். நானும் கோர்ட்டிலிருந்தவர்களும் ஆச்சரியப்பட்டோம். உடனே சாட்சியை அழைக்குமாறு உத்திர விட்டேன். அப்பொழுது உன் தோழி இருக்கிறாளே பத்மா, அவள் வந்து சாட்சிக் கூண்டில் நின்றாள். அவளைக் கண்டதும் எனக்கு மேலும் ஆச்சரியமாக இருந்தது. அவள் தன்னுடன் தான் அன்றிரவு வித்வான் இருந்ததாகவும், தாங்கள் இருவரும் கலியாணம் செய்து கொள்ளப் போவதாலேயே அப்படி இரவு தங்க தன் பெற்றோர்கள் அனுமதித்ததாகவும் கூறினாள்."

சுந்தரிக்கு அது ஆச்சரியமாக இருந்தது. பத்மா தன்னைக் காட்டிக் கொடுத்து விடுவாள் என்று எண்ணியதற்கு மாறாக தன் மானத்தையும், தன் தகப்பனார் அந்தஸ்து முதலியவைகளையும் பாராமல் அவள் ஒரு உயிரைக் காப்பாற்ற எடுத்துக் கொண்ட காரியத்தை எண்ணி மகிழ்ந்தாள். அதே சமயம் தான் தன் இஷ்டம் பூர்த்தியாகும் வரை எப்படிக் கெஞ்சினோம், போற்றினோம், பிறகு எப்படி அலட்சியம் செய்தோம் என்பதை நினைத்து வெட்கினாள்.

சிவராமன் மேலும் சொல்லாமல் நிறுத்தியதைக் கண்டு, "பிறகு?" என்றாள்.

"பிறகு என்ன? அவனை விடுதலை செய்து விட்டேன்"

"அவ்வளவு சாட்சிகள் அவருக்கு எதிராக இருந்தும், அவள் சொல்வதை நம்பி எப்படி நீங்கள் அவரை விடுதலை செய்தீர்கள்?"

"நான் அவள் சொன்னதை நம்பவில்லை. அவன் கொலை நடந்த இரவு அந்த இடத்தில் இல்லை என்பது எனக்குத் தெரிந்தது. அத்துடன் அவனும் தான் எங்கு தங்கினான் என்பதை எக்காரணத்தாலோ மறைக்கிறான் என்றும் உணர்ந்தேன். விடுதலை செய்தேன்."

"பின் எங்கிருந்தார் என்று நினைக்கிறீர்கள்?"

"ஹூம். அது எனக்கு என்னத்திற்கு?" என்று அலட்சியமாகச் சொன்னார் சிவராம்.

வித்வான் அன்றிரவு இங்கு தங்கியதைக் கணவர் தெரிந்து கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்தாள் சுந்தரி. உடன் விஷயம் பூராவையும் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தாள். சிவராமன் கையைப் பிடித்துக் கொண்டு அவள் தழு தழுத்த குரலில் "என்னை மன்னிப்பதாகச் சொல்லுங்கள். ஒரு விஷயம் சொல்கிறேன்" என்றாள்.

"விஷயத்தைச் சொல்லு; மன்னிக்கிறேன்."

"நீங்கள் வெளியூர் போயிருந்த அன்று நான் என் வெகுநாளைய ஆவலான வித்வானை எதிரில் வைத்துப் பாடக் கேட்பதை பூர்த்தி செய்து கொள்ள நினைத்தேன். பத்மாவின் காதலன் அவர். அவரையே அவள் கலியாணம் பண்ணிக்கப் போகிறாள். அவள் பெற்றோர்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். அதனால் பத்மாவிடம் சொன்னேன். முன்பும் பல முறை அவளிடம் சொல்லியுள்ளேன்.

"அவளும் இந்தச் சாக்கில் தன் காதலனைப் பார்க்கலாம் என்ற அவாவில் உடனே அவரை வரவழைத்தாள். அன்றிரவு பூராவும் அவர் எதிரில் உட்கார்ந்து, தாங்கள் இருவரும் பாட்டுக் கேட்டோம். எனக்கு அவர் பாட்டைக் கேட்க வேண்டும் என்ற ஆசையைத் தவிர வேறு ஒன்றுமில்லை" என்று கண்ணீர் வடிய சுந்தரி கூறினாள்.

சிவராமன் ஒரு புன்சிரிப்புடன் "அட, பைத்தியமே. இதற்காகவா இத்தனை பூர்வ பீடிகை. இதை அப்பொழுதே என்னிடம் சொல்லியிருக்கக்கூடாதோ? இவ்வளவு மனக் கலக்கம் ஏற்படாதிருக்குமல்லவா?" என்று கூறிக் கொண்டே அவளை அருகில் இழுத்து மார்புடன் அணைத்துக் கொண்டார். அவளும் தன் மனதிலிருந்த ஒரு பாரம் இறங்கியது போல் அவர் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

சோப்பு ஜலத்தால் கருங் கூந்தலை விரைவில் மிருதுவாக்கலாம். ஆனால் பழுப்பு ரோமமும், நரைத்த ரோமமும் மிருதுவாக அதிக நேரம் பிடிக்கும்.

முகத்தின் மீதுள்ள தோலின் பருமன் 4·5 மில்லி மீட்டர்



காதலின் வளர்ச்சிமுன்னே இந்த கறையான் புற்றின் வளர்ச்சி என்ன!...ஓப்பை...
ஹூம். கழிசல். காதல் வேகத்தின் முன் டெக்கான் குய்ன் எக்ஸ்ப்ரஸ் என்ன?......
அமரிக்காவின் அணுகுண்டால் கூட காதல் பலத்தை அசைக்க முடியாது......
அடாமிக் பொடி
கடலுக்கு கரையிருந்தாலும் காதலுக்கு கரையேது?.....
ஆஹா.. நம் கதாநாயகன் காதல் தியாகத்துக்கு இது சரியான எடுத்துக்காட்டு..
சும்மா வாய்யா.. பேத்துரே....... இதெல்லாம் கதை போற போக்கு...
?!?!?

குரலினிய சூர்ய குமாரியின் பாட்டு
களை சில தினங்களிலேயே "சம்ஸார
நௌகா"வில் கேட்கலாம்.

"சந்திரலேகா"வில் வில்லன் வேஷத்தில் தோன்றி வெகு ஜோராய் நடிக்கும் ஆர். ரஞ்சன்.

இது செய்தி

முதலாளிமீது வழக்கு

ஏகம்பவாணன் படத்தைத் தயாரித்த சரவணபவா பிக்சர்ஸின் முதலாளி ஸ்ரீ. எஸ். ஆர். எம். ராமநாதன் செட்டியார் பேரில், ஸ்ரீ ராஜன் பிக்சர்ஸார், கோயமுத்தூர் நகர், முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறார்களாம். வழக்கின் சாராம்சம் என்னவென்றால், ஷை சரவணபவா பிக்சர்ஸார், ஸ்ரீ ராஜன் பிக்சர்ஸாருக்கு மைசூர் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்களுக்கு விநியோக உரிமையைத் தருவதாகக் கூறி பணம் வாங்கிக்கொண்டு, மேற்படி சமஸ்தானங்களுக்குள்ள விநியோக உரிமையை பெங்களூர் நந்தி பிக்சர்ஸ் சர்க்யூட்டிற்கும், . சினிமா டைரெக்டர் எச். எம். ரெட்டிக்கும் கொடுத்திருக்கிறார்களாம். நியாயம் வழங்கவேண்டுமாறு ஸ்ரீராஜன் பிக்சர்ஸார் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்களாம்.

எழுத்தாளர் சங்கம்

சென்ற பதினொன்றாம் தேதி நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அங்கத்தினர்களின் பொதுக் கூட்டத்தில், வருகிற மூன்றாவது தமிழ் எழுத்தாளர் மகாநாட்டுத் தலைவராக **பிரசண்ட விகடன்** ஆசிரியர் ஸ்ரீ. நாரண துரைக்கண்ணன் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

கிரஹப் பிரவேசம்

ஸர்வஜித் வருஷம் பங்குனி மாதம் 7-ந் தேதி மைலாப்பூர் சாந்தோம் லலிதா நகரில் லலிதா விலாஸில் செம்பை ஸ்ரீ. வைத்தியநாத பாகவதர் கிரகப் பிரவேசம் செய்தார். இது சம்பந்தமாக, ஜி. என். பி, குமாரி ரத்னம், எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஆகியவர்களின் கச்சேரியும், தேநீர் விருந்தும் மூன்று தினங்கள் நடைபெற்றன. லலிதா நகரில் லலிதா விலாஸில் குடிபுகுந்திருக்கும் ஸ்ரீ. பாகவதர் அவர்களுக்கு லளித கலைவாணியின் அருளும், திருமகள் கடாட்சமும் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

மந்திரி குமாரி

ஸ்ரீ தேவி நாடக சபையினர் சமீபத்தில் தங்களது பிரசித்த நாடகமான "மந்திரி குமாரி"யை மார்ச் 24-ந் தேதி திண்டுக்கல் சோலை ஹாலில் அந்த ஊர் டிப்டி கலெக்டர் ஸ்ரீ. ஏ. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடித்துக் காட்டினார்களாம்.

மஹாலிங்கத்தின் நாடகம்

பிரபல சினிமா நடிகரான டி. ஆர். மஹாலிங்கம் சென்ற பத்தாந் தேதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நெல்லியடி என்ற ஊரில் **பவளக்கொடி** நாடகத்தில் நடித்தாராம். யாழ்ப்பாணவாசிகளிடமிருந்து நிறைய பாராட்டுதல்களை சம்பாதித்துக் கொண்டாராம். மேலும் ஒரு நாடகத்தில்கூட நடிக்க வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறாராம்.

ஆசிரியர் மாஜிஸ்திரேட்டாகிறார்

"அஜந்தா" பத்திரிகையின் ஆசிரியர் கே. ஸ்ரீ. ஸ்ரீபாரதி பிக்சர்ஸார் பிரகதி ஸ்டுடியோவில் தயாரிக்கும் **மின்மினி** படத்தில் மாஜிஸ்திரேட்டாக நடித்து வருகிறாராம்.

சியாமளாவின் அடுத்தது

சியாமளா பிக்சர்ஸார் தங்களது

அடுத்த படமாக முத்துமாலை என்ற படத்தைத் தயாரிப்பார்களாம். பிரதம பாகத்திலே டி. ஆர். மஹாலிங்கம் நடிக்கக் கூடும் என்று தெரிகிறது.

பதில்?

சென்ற தமிழ் வருஷப் பிறப்பன்று சென்னை ஒய். எம். ஐ. ஏ. லளித கலைப் பகுதியினர் "பதில்?" என்ற நாடகத்தை ஸ்ரீ. ராஜா அய்யர் தலைமையில், கோகலே ஹாலில் நடித்துக் காட்டினர். நாடகம் விறுவிறுப்பாக இருந்ததாம். வி.டி. ராஜகோபாலனின் பெண் வேஷமும், பாட்டும் மிக நன்றாயிருந்ததாம்.

புயல்

கோவை ஷண்முகா அரங்கில் "அகிலன்" எழுதிய "புயல்" என்ற நாடகத்தை டி. கே. எஸ். சகோதரர்கள் வருஷப் பிறப்பன்று அரங்கேற்றம் செய்தார்கள்.

ஆதித்தன் கனவு

மாடர்ன் தியேட்டர்ஸார் அடுத்தபடியாகத் தயாரிக்கப் போகும் படத்தின் பெயர் **ஆதித்தன் கனவு** என்பதாம். டி. ஆர். மஹாலிங்கம், டி. பிரேமாவதி, டி. ஆர். ரஜனி ஆகியவர்கள் இப் படத்திற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்களாம். டி. ஆர். சுந்தரம்தான் இதை டைரெக்ட் செய்யப் போகிறாராம்.

பில்ஹணன்

டி. கே. எஸ். சகோதரர்களும், ஷண்முகா பிலிம்ஸாரும் சேர்ந்து தயாரித்த **பில்ஹணனின்** வர்த்தகக் காக்ஷி இம் மாதம் மூன்றாம் தேதி நியூ குளோப் தியேட்டரில் நடைபெற்றது. டைரெக்டர்களும், நடிகர்களும், தொழில் பிரமுகர்களும், பத்திரிகைக்காரர்களும் வந்திருந்தனர். படம் முடிந்த பின்னர் மேயர் கிருஷ்ணராவ் படத்தைப் பற்றிப் பேசினார். பின்னர் மாஜி மேயர் ராதா கிருஷ்ண

ஜெய் ஹிந்த்
வந்தே மாதரம்

பாரத மக்களே!

களைப்பைப் போக்குவது பாரத் பானங்களே!
உணர்ச்சி உண்டாக்குவதும் பாரத் பானங்களே!
உத்ஸாகம் ஊட்டுவதும் பாரத் பானங்கள்தான்!

பாரத மக்களுக்கு பாரத் பானங்கள் மட்டும்தான் பரம திருப்தியைக் கொடுப்பது. பதினைந்து வருஷ அனுபவஸ்தர்களின் அரிய தயாரிப்புகள்

பாரத் பானங்களாகிய ஸோடா, கோலா சாம்பைன், ஆரஞ்சு, லெம்ஜூஸ் ஸ்பெஷல் எல்லாம் கிடைக்கும்.

பாரத் சோடா கம்பெனி

34, சம்பந்தமூர்த்தி தெரு, :: மதுரை.

பிள்ளை பேசினர். பிறகு திரிலோக சீதாராம், பாரதி விடுதலைக் கழக ஸ்தாபித்ததைப் பற்றிப் பேசினர்! டி. கே. முத்துசாமி நன்றி கூற விழா முடிவடைந்தது. படத்தை வெகு உயர் தரமாகவும், ஆபாசமே இல்லாமலும் எடுத்திருக்கிருர்கள். நடிகர்களும் தங்கள் பாகத்தை உணர்ந்து நடித்திருக்கிருர்கள்.

காமவல்லி

பாஸ்கர் பிக்சர்ஸார், சோபனசலா ஸ்டுடியோவில் தயாரித்த **காமவல்லி** வெளியாகி விட்டது. சென்னை போன்ற நகரங்களில் காக்ஷியளிக்காவிட்டாலும் சென்னையைச் சுற்றியுள்ள டெண்ட் சினிமாக்களில் காக்ஷியளித்து வருகிறது. நாகர் கோயில் மகாதேவன், கிருஷ்ண வேணி, வரலக்ஷ்மி, டி. எஸ். துரைராஜ், டி. எஸ். ஜயா முதலியவர்கள் நடித்தது. மாணிக்கம் என்பவர் டைரெக்ட் செய்திருக்கிருர்.

கீதா பிக்சர்ஸ்

பிரபல நடிகர் சிறுகளத்தூர் சாமா, டி. கே. வெங்கடராமன் முதலியவர்கள் சேர்ந்து **கீதா பிக்சர்ஸ்** என்ருெரு படக் கம்பெனியைத் துவக்கி யிருக்கிருர்கள். பி. எஸ். சரோஜா ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிருராம்.

தணிக்கை போர்டு

ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் சென்னை தணிக்கை போர்டின் அங்கத்தினர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கிருர். ஸ்ரீமதி துர்க்காபாய் தமது பதவியை ராஜினுமாச் செய்து விடவே இந்த நியமனம் ஆகி யிருக்கிறதாம்.

மாரியம்மன்

செல்வம் பிலிம்ஸ் தயாரிப்பான **மாரியம்மன்** கோவை போன்ற இடங்களில் வெளியாகி விட்டதாம்.

டி. எஸ். சகுந்தலா, ஆர். பத்மா, எஸ். டி. சுப்பையா, காளி ரத்னம், ஜயா, மாதவன், சஹாதேவன் முதலியவர்கள் நடித்தது. எல். எஸ். ராமச்சந்திரன் இதை டைரெக்ட் செய்திருக்கிருர்.

குண சுந்தரி கதை

வாஹினி பிக்சர்ஸார், வாஹினி ஸ்டுடியோவிலேயே, ஸ்ரீ. கே வி. ரெட்டியின் டைரெக்ஷனில் குண சுந்தரி கதை என்ற ஒரு தெலுங்குப் படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிருர்களாம். விரைவிலேயே வாஹினி ஸ்டுடியோ ஆரம்பமாகும்.

கண்ணும்பாவின் அடுத்தது.

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிக்சர்ஸார் ஜெமினி ஸ்டுடியோவிலேயே தயாரிக்

நீங்கள் விரும்பும்
உயர்ந்தரக ஜவுளிகள்

யாவும் குறைந்த
விலையில் எம்மிடம்
கிடைக்கும்

★

வாசுகி
வஸ்திராலயம்

22, மேல சித்திரை வீதி,
மதுரை.

கப் போகும் படம் சமூகப் படமாக இருக்கும். இதிலே நாகையா, கண்ணாம்பா, ஸ்ரீராம், வரலக்ஷ்மி, நாராயண ராவ், சுந்தரிபாய் முதலியவர்கள நடிப்பார்கள். கே. நாகபூஷணம்தான் டைரெக்ட் செய்யப் போகிறார்.

மேயருக்கு உபசரணை

மதராஸ் தியேட்டர்ஸ் மானேஜிங் டைரெக்டர் ஸ்ரீ. டி. சாரதி, சென்னை நகர மேயர், ஸ்ரீ. யு. கிருஷ்ணாராவ் அவர்களுக்கும், நகர ஷெரிப் எல். எ. ஷாபி முகமது அவர்களுக்கும் 23-2-48 "வுட்லண்ட்ஸில்" ஒரு தேநீர் விருந்து அளித்தாராம். பல பிரமுகர்கள் அன்று விஜயம் செய்தார்களாம்.

மாளவிகா

முன்பே பிரகதி பிக்சர்ஸார் அறிவித்திருந்த, "மாளவிகா" என்ற 'காளிதாஸ'னின் நாடகத்தை படமாக்கத் திட்டமிட்டிருக்கிறார்களாம். கே. ஆர். ராமசாமி, ரஜனி, வஸந்த கோகிலம் முதலியவர்கள் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

ஹிந்த் கலா மந்திர்

தியாகராய நகரில் "ஹிந்த் கலா மந்திரி"ன் ஆரம்ப விழா இம் மாதம் 8-ம்தேதியன்று தியாகராய நகர் கோவாபரேடிவ் ஹாலில் நடைபெற்றது. அட்வொகேட் ஜெனரல் கே. ராஜா ஐயர் தலைமை வகித்தார். ஸ்ரீமான்கள் வி. எஸ். கோபாலரத்தினம், வீரராகவய்யர், சுந்தரகிருஷ்ணமாச்சாரியார், மந்திரின் தலைவர் துரைசாமி ஆகியோர் பேசினார்கள். நாடகக் கலைக்கு சேவை செய்வதே இம்மந்திரத்தின் நோக்கமாம். "துர்காதாஸ்" என்ற ஹிந்தி நாடகத்தை நடிக்க இவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றனர்.

நக்கீரர்

கோடம்பாக்கத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோ மே மாதத்தில் வேலை தொடங்கிவிடும். முன்பே இவர்கள் திட்டம் போட்டிருந்த நக்கீரர் தமிழ் படத்தையும், பி. எஸ். ரங்காவின் டைரக்ஷனில் "தெனாலிராம கிருஷ்ணா" என்ற கன்னடப் படத்தையும் தயாரிப்பார்கள். நக்கீரர் படத்தில் தேசிகர் நடிப்பார்.

Telegrams: "VYRAM"

திரையிடத் தயார்!
ப்ரகதி பிக்சர்ஸ் &
ஸ்டார் கம்பைன்ஸ் தயாரித்த
சம்சாரநௌகா
அல்லது வாழ்க்கை படகு
T.R.ராமச்சந்திரன்...
T.பிரேமாவதி • B.R.பந்துலு • T.R.ராமச்சந்திரன்
T.சூர்யகுமாரி • M.J.ஆண்டாள் • R.கிருஷ்ணமூர்த்தி • T.K.உபேந்திரா
கதை, டைரக்ஷன்
H.L.N.சிம்ஹா
ஸ்டூடியோ
ப்ரகதி
சென்னை, வடகதென் ஆற்காடு, செங்கற்பட்டு, சித்தூர் ஜில்லா
& பாண்டிச்சேரி: நேஷனல் பிக்சர்ஸ். வேலூர்
இதர பிரதேசங்களுக்கு.... ஸ்டார் கம்பைன்ஸ் லிமிடெட்
உட்ஸ் ரோட்... மதராஸ். 2.

பில்ஹணன்—விரசமற்ற நல்ல படம்

டைரெக்டர் ஸ்ரீநிவாஸனின் சிறந்த உழைப்பு

டி. கே. எஸ். சகோதரர்களும், ஷண்முகா பிலிம்ஸாரும் சேர்ந்து கோவை ஸெண்ட்ரல் ஸ்டுடியோவில் தயாரித்த "பில்ஹணன்" தமிழ்ப் படத்தை சென்ற மாதம் மூன்றும் தேதி சென்னை நியூ குளோப் தியேட்டரில் பத்திரிகைக் காரர்களுக்கும், தொழில் பிரமுகர்களுக்கும் திரையிட்டுக் காட்டினார்கள். ஏற்கனவே நாடக மேடையில் பிரசித்தம் வாய்ந்த இக்கதையை சினிமாவுக்கு வேண்டிய சில மாறுதல்களுடன் தயாரித்திருக்கிறார்கள்.

மன்னன் மதனன், தன் மகளின் கல்வி அறிவை வளர்க்க வேண்டி தகுந்த ஆசான் ஒருவனைத் தேடுகிறான். அரண்மனைப் புலவர்கள் தகுதியில்லாமல் போகவே, பக்கத்து ராஜ்யங்களுக் கெல்லாம் ஏவலாட்களை அனுப்புகிறான். ஆனால் பக்கத்துக் காட்டிலிருந்த ஆசிரமத்திலுள்ள பில்ஹணனை ஒருவர் சிபாரிசு செய்யுவே, அரசன் பில்ஹணனை அழைத்துவர ஏற்பாடு செய்கிறான்.

பில்ஹணன் முதலில் மறுத்தானேயானாலும், பிறகு ஒப்புக்கொள்கிறான். மதனன் பில்ஹணனையும் மகள் யாமினியையும் கவனித்துப் பார்க்கிறான். அவர்களுக்குள் ஏதாவது விபரீதம் நடக்கக் கூடும் என நினைத்து, ஒரு திரை போட்டு அவர்கள் ஒருவரையொருவர் பார்க்காவண்ணம் செய்து விடுகிறான். இது தவிர, பில்ஹணனிடம் யாமினிக்கு முகத்தில் நோயிருப்பதாகவும், யாமினியிடம் பில்ஹணன் குருடன் என்றும் சொல்லியிருந்தான்.

முதல் செவிடர்:—எங்கே ஸார்! சினிமாவிற்கா?"

இரண்டாவது செவிடர்:-"இல்லே சார். சினிமாவிற்குப் போகிறேன்."

முதல் செவிடர்:—"ஜோராய் போகிறீர்களே; சினிமாவிற்குத் தான் போகிறீரோன்னு நினேச்சுட்டேன்."

மத்தியில் திரையிருந்ததால் பில்ஹணனும் யாமினியும் ஒருவரை ஒருவர் பார்க்க முடியவில்லை. வித்யாப்பியாசமும் திரைக்குப் பின்தான் நடைபெற்றுவந்தது. பில்ஹணனின் பாண்டித்தியத்தையும் அவன் கற்பிக்கும் முறையையும் கண்டு யாமினி அவன் மீது காதல் கொள்கிறாள். பில்ஹணனே, யாமினியின் திறமையையும் அவள் ஒவ்வொரு பாடத்தையும் கற்கும்பொழுது காட்டிய ஆர்வத்தையும் கண்டு அவள்மீது காதல் கொள்கிறான். ஆனால் இருவரும் நேர்முகமாகப் பார்த்து தங்கள் மனதில் உள்ளதைச் சொல்லிக்கொள்ள வில்லை. இதற்குத் தடையாக இருந்தது திரை.

ஒரு நாள் பில்ஹணன், நிலவைக் குறித்துப் பாடுகிறான். யாமினிக்கு சந்தேகம். குருடன் எப்படி நிலவைப் பற்றி வர்ணிக்க முடியும் என நினைக்கிறாள். உடனே பில்ஹணனைக் கேட்டும் விடுகிறாள். கண் இருப்பதாக அறிந்தாள். திரையைக் கிழித்துப்

புத்தாண்டு
பரிசு!
விரைவில்
வருகிறது
சேலம் சூர்யா பிலிம்ஸாரின்
ஸ்ரீ ஆண்டாள்
ஜீவரத்னம் • கோவிந்தன்
வித்வான் சீனிவாசன் • சுப்பையா • காளி N. ரத்னம்
ஏழுமலை • மாதவன் • சௌதாமினி • குமாரி ரமணி
மீனாக்ஷி • P. S. ஞானம் மற்றும் பல நக்ஷத்திரங்கள்
டைரக்ஷன்
வேல்சாமி கவி
உதவி
S. K. ராமராஜ்
பாடல்கள்
சுத்தானந்த
பாரதியார்
ஸ்டுடியோ
மாடர்ன்
சேலம் சூர்யா பிலிம்ஸ், எக்ஸ்டென்ஷன்...சேலம்..
கோயமுத்தூர் & நீலகிரி உரிமைகளுக்கு : ரேவதி பிக்சர்ஸ், லிமிடெட்
உடையகுளம், பொள்ளாச்சி, ராமனாதபுரம் & புதுக்கோட்டை :
ஸ்ரீ லக்ஷ்மி பிலிம்ஸ், கல்லிடைக்குறிச்சி
மலபார், கொச்சி & திருவாங்கூர் : மணி பிலிம்ஸ், செங்கோட்டை

பார்த்து விட்டாள். பில்ஹணனும் திடுக்கிட்டு விட்டான். அவள் முகத்தில் யாதொரு நோயும் இல்லை. ஒருவர்க்கொருவர் தங்களிடம் அரசன் சொன்னதைச் சொல்லிக் கொண்டார்கள். பில்ஹணனும் யாமினியும் ஒருவரை ஒருவர் அறிந்து இன்பமாக இருக்க விரும்பினர்.

திரை கிழிக்கப்பட்டதை அறிந்த மதனன் கோபம் கொண்டான். பில்ஹணனை சிரச் சேதம் செய்ய உத்திரவிட்டான். யாமினி கெஞ்சினாள்; அழுதாள்; ஒரு பயனுமில்லை.

பில்ஹணனின் சிநேகிதர்கள் கிளர்ச்சி செய்தார்கள். புரட்சி செய்தார்கள். மன்னன் வணங்கினான். காதலின் சக்தியை உணர்ந்தான். பில்ஹணனுக்கும் யாமினிக்கும் மணமாயிற்று.

இது தான் கதை. இதை ஆபாசப் பகுதிகளால் பாழ்படுத்தாமல் கச்சிதமாகத் தயாரித்திருக்கிறார்கள்.

பில்ஹணனாக வரும் டி. கே. ஷண்முகம், யாமினியாக வரும் திரௌபதி, மதனனாக வரும் டி. கே. பகவதி ஆகியவர்கள் தங்கள் பாத்திரங்களை உணர்ந்து நடித்திருக்கிறார்கள். ஷண்முகமும், திரௌபதியும், சுமாராகப் பாடியிருக்கிறார்கள். பாரதியார், பாரதிதாசன், தேசிக விநாயகம் பிள்ளை ஆகியவர்களின் பாடல்கள் இப்படத்தில் இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குறிய விஷயமாகும்.

ஹாஸ்ய பாகம் சோபிக்கவில்லை. பாடல்களும தகுந்த ராகங்களில்—பொது ஜனங்கள் எளிதில் உணரக் கூடியவாறு அமையவில்லை.

படப் பிடிப்பு வெகு நன்றாக இருக்கிறது. ஒலிப்பதிவும் திருப்திகரமாக அமைந்திருக்கிறது. காக்ஷி ஜோடனைகள் எல்லாம் நன்றாக இருக்கிறது.

டைரெக்ஷனிலே சில புது 'டெக்னிக்குகள்' காணப்படுகின்றன.

டைரெக்டர் ஸ்ரீனிவாஸனுக்கு இப்படம் ஒரு அபரிமித்மான வெற்றி என்றே கூறலாம். மொத்தத்தில், பில்ஹணன், கலைச்சுவை உடையோர் விரும்பக்கூடிய ஒரு ஆபாச மற்ற நல்ல படமாகும். —"ஜீ"

வீண் வதந்தி

(சிறுகதைத் தொகுதி)

(சின்ன அண்ணாமலை முன்னுரையுடன்)

வெள்ளிமணி ஆசிரியர் :

"சாவி" (எழுதியது)

(நான்கு சிறுகதைகள் அடங்கியது)

விலை அணா நான்கு

தபாலில்பெற விரும்புவோர் ஐந்து அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

குண்டூசி காரியாலயம்
சென்னை 1.

புதுமுறை வெளியீடு
மாம்பலம் :: சென்னை.



பிரம்மலோகம்

அபிமன்யு

ஜுபிடர் பிக்சர்ஸாரின் "அபிமன்யு" இம் மாதத்திலேயே திரையிடப்படும் என்று தெரிகிறது. ருசிகரமான சம்பவங்களைக் கொண்ட இக்கதை, முதலாளிகளுக்கு நல்ல வசூலை அளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. யூ. ஆர். ஜீவரத்தினம், குமரேசன், எம். ஆர். சந்தானலக்ஷ்மி, புளிமூட்டை ராமசாமி, டி. பாலசுப்ரமண்யம், எஸ். வி. சுப்பையா, எம். ஜி. ராமச்சந்திரன், பி. வி. நரசிம்மபாரதி, எம். என். நம்பியார், எம். எஸ். சிவபாக்கியம், ஆர். மாலதி ஆகியவர்கள் நடித்திருக்கிறார்கள். திரைக் கதை வசனத்தை ஏ. எஸ். ஏ. சாமி எழுதியிருக்கிறார். ஜுபிடரின் பாகஸ்தர் எம். சோமசுந்தரமும், ஏ. காசிலிங்கமும் இப்படத்தை டைரெக்ட் செய்திருக்கிறார்கள்.

ஆண்டாள்

மூர்த்தி பிலிம்ஸாரின் "ஆண்டாள்" இப்பொழுது சூர்யா பிலிம்ஸ் ஆண்டாளாக மாறியிருக்கிறது. வேல்சாமிக் கவியின் டைரெக்ஷனிலே மாடர்ன் தியேட்டர்ஸில் மளமளவென்று தயாராகிக் கொண்டிருக்கிறது. யூ. ஆர். ஜீவரத்தினம், பி. எஸ். கோவிந்தன், வித்வான் ஸ்ரீனிவாஸன், எம். இ. மாதவன், காளி என். ரத்தினம் முதலியவர்கள் நடித்து வருகிறார்கள்.

மோகினி

ஜுபிடர் பிக்சர்ஸ் தயாரிப்பான "மோகினி"யில் வி. என். ஜானகி, மாதுரி தேவி, பாலையா முதலியவர்கள் நடித்து வருகிறார்களாம். லங்கா சத்தியம் டைரெக்ட் செய்து வருகிறார்.

விஜயகுமாரி

எம். என். நம்பியார், எம். எஸ். எஸ். பாக்கியம் நடிக்கும் ஜுபிடர் பிக்சர்ஸின் மற்றொரு தயாரிப்பான "விஜய குமாரி" கோவை ஸெண்ட்ரல் ஸ்டுடியோவில் தயாராகிக் கொண்டு வருகிறதாம்.

கிருஷ்ண பக்தி

கிருஷ்ணா பிக்சர்ஸின் "கிருஷ்ண பக்தி" மும்மரமாகத் தயாராகிக் கொண்டு வருகிறது. சுமார் பதினைந்தாயிரம் அடிகளுக்கு மேல் தயாராகி விட்டதாம். ஆர். எஸ். மணி அதிக கவனத்துடன் டைரெக்ட் செய்து வருகிறாராம்! சின்னப்பா, ராஜ குமாரி ராமசாமி, சகுந்தலா பெரிய நாயகி, தனலக்ஷ்மி தமயந்தி, சிதம்பரம் ஜயராம் பிள்ளை, கிருஷ்ணன். மதுரம், புளிமூட்டை ராமசாமி, ஆழ்வார் குப்புசாமி, டி. வி. நமசிவாயம் முதலிய நக்ஷத்திர நடிகர்கள் நடித்து வருகிறார்கள்.

கோகுலதாஸி

திரன் கம்பெனியார் கே. சுப்ரமண்யத்தின் டைரெக்ஷனில் தயாரித்திருக்கும் "கோகுலதாஸி" தமிழ்ப் படம் அடுத்த மாதத்தில் வெளிவரும் என்று தெரிகிறது. ஹொன்னப்ப பாகவதரும், எம். வி ராஜம்மாவும் பிரதம பாகங்களில் நடிக்கும் இப் படத்தை சென்னை நகரம் வட-தென்னாற்காடு, செங்கற்பட்டு, சேலம், தஞ்சாவூர், திருச்சி. ஆந்திர ஜில்லாக்கள், பர்மா ஆகிய பிரதேசங்களில் விநியோகிக்கும் உரிமைகளை, வேலூர், ஆம்பூர், ஆகிய ஊர்களில் காரியாலயங்களுடைய ஸ்ரீ முருகர் புரொடக்ஷன்ஸார் வாங்கிக் கொண்டிருக்கின்றனர். இலங்கை எப். எம். எஸ். ஆகிய பிரதேசங்களில் விநி

புதிய வெளியீடு

உலகப்பெரியார் காந்தி	1-0-0
ரேடியோவில் அண்ணா	0-12-0
ரோமாபுரி ராணிகள்	2-4-0
கம்பரசம்	1-8-0
குமரிக்கோட்டம்	1-0-0
விடுதலைப்போர்	1-0-0
கற்பனைச்சித்திரம்	1-0-0
ஆரிய மாயை	1-0-0
சிறுகதைகள்	1-0-0
வர்ணாஸ்ரமம்	0-12-0
தாழ்ந்த தமிழகமே	0-8-0
மே தினம்	0-5-0

திராவிடப் பண்ணை
தெப்பகுளம், திருச்சி.

மதுரையில்
நாகரீக ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்

நீல மாளிகை

கே. எஸ். பெருமாள் முதலியார்
& சன்,
3/4, தெற்கு சித்திரை வீதி, மதுரை.

யோகிக்கும் உரிமைகளை ஸிலோன் தியேட்டர்ஸார் வாங்கிக் கொண்டிருக்கின்றனர்.

பிழைக்கும் வழி

பிரபல ஹாஸ்ய நடிகர் டி. எஸ். துரைராஜின் சொந்தத் தயாரிப்பான "பிழைக்கும் வழி" சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் தயாராகி வருகிறது. டி. கே. சுந்தர வாத்தியார் இப்படத்தின் கதை, வசனம், பாட்டுகள் முதலியவற்றைத் தயாரித்திருக்கிறார். மித்ர தாஸ் என்பவர் டைரெக்ட் செய்து வருகிறார். டி. எஸ். துரைராஜ், எம். ஆர். சாமிநாதன், காளி என். ரத்னம், கே. கே. பெருமாள், டி. எஸ். பாலையா, பி. ஜி. வெங்கடேசன், குளத்து மணி, எம். எஸ். நாராயணன், பி. சுந்தர்ராவ், டி. ஏ. ஜயலக்ஷ்மி, ஸி. டி. ராஜகாந்தம், பி. ஆர். மங்களம், பி. எஸ். ஞானம் முதலியவர்கள் நடித்து வருகிறார்கள். ஸ்ரீமதி. டி. கே. பட்டம்மாளின் பின்னணி கீதமும் உண்டு.

ஜீவகன்

ஸ்ரீகந்தன் கம்பெனியாரின் "ஜீவகன்" பிரகதி ஸ்டுடியோவில் டி. ஆர். ரகுநாத்தின் டைரெக்ஷனில் தயாராகி வருகிறது. ஹொன்னப்ப பாகவதர், ஏ. ஆர். சகுந்தலா சம்பந்தப்பட்ட காக்ஷிகள் சில பிடிக்கப் பட்டதாம். யு. ஆர். ஜீவரத்தினம், புளிமூட்டை முதலியவர்கள் இதில் நடிக்கிறார்கள்.

சம்சார நௌகா

பி. ஆர். பந்துலு, திருச்சூர் பிரேமாவதி, எம். ஜே. ஆண்டாள், டி. ஆர். ராமச்சந்திரன், கல்யாணம், டி. கே. மதுரம் முதலியவர்கள் நடித்திருக்கும் ஸ்டார் கம்பைன்ஸின் "சம்சார நௌகா" மே மாத மத்தியில் திரைக்கு வந்துவிடுமாம். இந்த 'சம்சார நௌகா'வின் கதாசிரியராகிய எச். எல். என். சிம்ஹாவே இதை டைரெக்ட் செய்திருக்கிறார்.

ராஜ முக்தி

புனா, பிரபாத் ஸ்டுடியோவிலே, நரேந்திரா பிக்சர்ஸின் "ராஜ முக்தி" வெகு ஜரூராகத் தயாராகி வருகிறது. தியாகராஜ பாகவதர் பாடியிருக்கும் பாட்டுகள் மிக நன்றாக அமைந்து விட்டதாம். சீறுகளத்தூர் சாமாவின் நடிப்பும் அதற்கேற்றாற் போல் இருக்கிறதாம். ஜானகி, பானுமதி, சாமிநாதன் ஆகியவர்களும் தங்கள் திறமையைக் காட்டியிருக்கிறார்களாம். 'புதுமைப் பித்தனின்' வசனங்களும், பாபநாசம் சிவனின் பாடல்களும், ராஜா சந்திரசேகரின் டைரெக்ஷனும் படத்தின் தரத்தை வெகுவாக உயர்த்தியிருக்கிறதாம். கூடிய சீக்கிரத்தில் இந்தப் படம் வெளிவரும்.

நல்ல தம்பி

பிரபல எழுத்தாளர் ஸ்ரீ. ஸி. என். அண்ணாத்துரையின் சிருஷ்டியாகிய "நல்லதம்பி" எனெஸ்கே பிலிம்ஸாருக்காக நியூடோனில் தயாராகி வருகிறது. என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், சகஸ்ரநாமம், பாண்டியன், ஆழ்வார்குப்புசாமி முதலியவர்கள் நடித்துவருகிறார்கள். "பைத்தியக்காரனை" டைரெக்ட் செய்து பிரக்யாதியடைந்த கிருஷ்ணன்—பஞ்சுவே இதையும் டைரெக்ட் செய்து வருகிறார்கள்.

சுதர்சன்

சின்னப்பா, கண்ணாம்பா, யோகமங்களம், மஹாலிங்கம் இவர்களுடன் பி. எஸ். சரோஜாவும் ராயல் டாக்கீஸின் "சுதர்ச"னில் நடிக்கக் கூடும் என்று தெரிகிறது. சுந்தர்ராவ் நட்கர்ணி இப்படத்தை டைரெக்ட் செய்கிறார்.

உங்கள் தேவைக்கு உடனே விஜயம் செய்யுங்கள்!

புதிய கடிகாரங்கள், ரிஸ்ட் வாட்சுகள், பவுண்டன் பேனாக்கள், நவீன பான்ஸி சாமான்கள், கிராமபோன் ஸ்பேர்பார்ட்டுகள் முதலியவை புதிதாக வந்துள்ளன.

உங்களுக்கு வேண்டியவைகளை விலை சரஸமாய் வாங்கிக்கொள்ளலாம். ஒரு முறை விஜயம்செய்து பாருங்கள்.

KAREEM WATCH COMPANY

[Guarantee Repairers, Dealers, General Merchants and Commission Agents.]

காட்சிசாலை:—53, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை.



மார்ச்சு

1948

தேதி

2. சென்னையில் நகர எல்லா தியேட்டர்களும் வாராந்திர விடுமுறையை அனுசரித்து தியேட்டர்களை மூடினார்கள்.

6. தமிழ் நாடு டாக்கீஸார் விநியோகம் செய்யும் 'இது நிஜமா?' பெங்களூரில் திரையிடப் பட்டது.

8. என். எஸ். கே. மதுரம் இவர்களின் குழந்தைக்கு, மா. பொ. சிவஞான கிராமணியாரால் 'கலைச் செல்வி' என்ற பெயரிடப் பட்டது.

9. பரணியின் 'ரத்னமாலா' தமிழ் நாட்டில் வெளியிடப் பட்டது.

12. மாடர்ன் தியேட்டர்ஸார் தங்களது அடுத்த படமான 'ஆதித்தன் கனவி'ன் ஆரம்ப பூஜையை நடத்தினார்கள்.

19. சென்னை கெயிட்டியில் சித்திரகலாவின் 'தாய்நாடு' வெளியிடப் பட்டது.

20. சேலம் மாடர்ன் தியேட்டர்ஸின் 'ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி'யின் நூறுவது நாள் விழா சென்னை பிராட்வே டாக்கீஸில் ராவ் பகதூர் வி. நரசிம்மம் தலைமையில் நடைபெற்றது.

சேலம் செல்வம் பில்ம்ஸின் 'மாரியம்மன்' கோவையில் திரையிடப்பட்டது.

பாஸ்கரின் 'காமவல்லி' சில டெண்ட் சினிமாக்களில் வெளியிடப்பட்டது.

செம்பை வைத்தியநாத பாகவதர் சாந்தோமில் தம் கிரகப் பிரவேசத்தை சிறப்பாக நடத்தினர்.

24 திண்டுக்கல் சோலை ஹாலில் தேவி நாடக சபையின் 'மந்திரி குமாரி' நாடகம் நடைபெற்றது.

31. மத்திய தணிக்கை போர்டு ஒன்றை அமைப்பது பற்றி பண்டித நேரு பார்லிமெண்டில் பேசினார்.

Printed by P. Arunachalam at the Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 246, Thambu Chetty Street, Madras 1.